# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkuTamilNewsOfficial https://twitter.com/Ilakku1

இதழ் 267 | சனி, டிசம்பர் 30, 2023 | 14 பக்கங்கள்


## விஜயகாந்தின் அரசியலில் ஈழத் தமிழர் பிரச்சினை

அகிலன்



## போரும், பொருளாதார அழிவுமாக கடந்து செல்லும் 2023


வேல்ஸ் இல் இருந்து அருஸ்

## 2023 இன் நம்பிக்கைகள் பொய்க்க யார் காரணம்?



காலமாகிய நடிகர் **விஜயகாந்த்** அவர்களுக்கு எமது நெஞ்சார்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்

அரசியல் ஆய்வாளர் யதீந்திரா



## ஈழத்தமிழர் சார்பில் இலக்கு தனது இரங்கலை தெரிவித்து நிற்கின்றது

முன்னனி திரைப்பட நடிகரும், அரசியல் கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினராக பதவி வகித்தவருமான, ஈழத்தமிழர்களுக்காக தொடாந்து குரல் கொடுத்து வந்தவருமான விஜயகாந்த் என்ற நாராயணன் விஜயராஜ் அழகர்சுவாமி அவர்கள் கடந்த வியாழக்கிழமை(28) காலமாகிவிட்டார்.

உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் சிகிச்சை பலனழிக்காததால்



தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

## அனுராதபுரத்தில் புத்தமயமாக்கப்பட்ட ஐயனார்




அனுராதபுரத்தில் உள்ள ஈசுர முனி புத்த விகாரை, தமிழரின் ஐயனார் கோயிலாகும். தேவநம்பிய தீசன் என்னும் மன்னரால் கட்டப்பட்டதாக இலங்கை தொல்லியல்துறை சொல்கிறது (ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியது). பல்வேறுகதைகள் சொல்லப்பட்டாலும் அவையின் உண்மைத்தன்மைகேள்விக் குறியான தேயாகும், என வேல்கடம்பன் ஈழப் பயணத்தின் ஆய்வில் கண்டறிந்த உண்மை என்ற தனது ஆய்வில் தெரி வித்துள்ளார்.

அவர் அதில் மேலும்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## இந்திய அரசு தொடர்ந்து ஊடகவியலாளர்களை அச்சுறுத்துகின்றது

இஸ்ரேலிய தயாரிப்பான பெகாசஸ் என்ற மென் பொருளை பயன் படுத்தி இந்திய அரசு ஊடகவியலாளாகளையும், செயற்பாட்டளர்களையும் தொடர்ந்து கண்காணித்து அச்சுறுத்திவருவதாக வொசிங்டனைத் தளமாகக் கொண்ட அனைத்துலக மன்னிப்புச் சபை கடந்த வியாழக்கிழமை(27) என தெரிவித்துள்ளது.

முன்னர் இந்திய அரசு கண்காணித்த ஊடகவியலாளர்களையும், செயற்பாட்டாளர்களையும் அது மீண்டும் கண்காணித்து வருகின்றது. என்.எஸ்.ஓ என்ற இஸ்ரேலிய நிறுவனம் தயாரித்த இந்த மொன்பொருளை பயன் படுத்தி தொலைபேசிகளை ஒட்டுக்



திருடுவது, மின்னஞ்சல்களை திருடுவது, நபர்களின் நகர்வுகளை பின்தொடர்வது போன்றவற்றை இந்தியா செய்து வருகின்றது.

வயர் என்ற இலத்திரனியல் ஊடகத்தில் பணியாற்றிய சித்தார்த் வரதராஜன் என்ற ஊடகவியலாளர் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்கள் மற்றும் ஊழல்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## போருக்கு தயாராகின்றது வடகொரியா



நாட்டின் படையினரை போருக்கு தயாராகுமறும் ஆயுத உற்றபத்தி, அணுவாயுதங்கள் மற்றும் வான்படையினரை போருக்கு ஏற்றவகையில் தயார் செய்யுமாறும் வடகொரியாவின் அரச தலைவர் கிம் ஜொங் உன் கடந்த புதன்கிழமை(28) கட்டளையிட்டுள்ளார்.

புதுவருடத்திற்கான கொள்கை விளக்க கூட்டத்தில் பேசும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேற்கத்தைய நாடுகளுக்கு எதிரான கூட்டணியின் வியூகங்களை வடகொரியா வரவேற்கின்றது. நாம் எமது பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் அதற்கு ஏற்ப தொழில்த்துறை விருத்தி செய்யப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வடகொரியா ரஸ்யாவுடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வருகின்றது. அது ரஸ்யாவுக்கு ஆயுத வினியோகங்களையும்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

## ஈரானின் படைத்துறை ஆலோசகர் ஏவுகணைத் தாக்குதலில் பலி

இஸ்ரேலிய வான்படையினர் சிரியாவில் தலைநகர் டமகஸ் பகுதியில் மேற்கொண்ட மிகவும் துல்லியமான ஏவுகணைத் தாக்குதலில் ஈரானின் புரட்சி படையின் தளபதிகளில் ஒருவரான பிரிகேடியர் ஜெனரல் சயீட்ராசி மௌசாவி கடந்த திங்கட் கிழமை (25) கொல்லப்பட்டுள்ளார்.

சிரியாவில் படைத்துறை ஆலோசகாரக பணியாற்றிய அவர் ஈரானின் மிகவும் தரம்வாய்ந்த கட்டளைத் தளபதிகளில் மௌசாவியும் ஒருவர். இது தொடர்பில் ஈரனின் பாதுகாப்பு அமைச்சகம் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளதுடன், அதற்கு பதிலடி கொடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

சிரியா, லெபனான், ஏமன், ஈராக் உட்பட அந்த பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளில் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்கும் எதிராக செயற்பட்டுவரும் அமைப்புக்களுக்கு ஈரான் தனது படைத்துறை பயிற்சியாளர்களின் மூலம் பயிற்சிகளை வழங்கிவருவதுடன், ஆயுதங்களையும் விநியோகித்து வருகின்றது.

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஈராக்கில் வைத்து அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏயினால் எம்.கியூ-9 என்ற



ஆளில்லாத தாக்குதல் விமானத்தின் மூலம் ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஈரானின் வெளியக படைத்துறை புலனாய்வு அமைப்பின் கட்டளை அதிகாரி ஜெனரல் குசெம் சொலைமனிக்கு நெருக்கமானவரே மௌசாவி. அந்த தாக்குதலுக்கான புலனாய்வுத் தகவல்களை இஸ்ரேல் வழங்கியிருந்தது.

அதற்கு பதிலடியாக ஈராக்கில் இருந்த அமெரிக்க தளம் மீது ஈரான் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் 100 படையினர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். ஈரானின் முக்கிய அதிகாரிகளை கொல்வதை அமெரிக்காவும், இஸ்ரேலும் காலம் காலமாக மேற்கொண்டு வருகின்றன. ஈரானின் அணுசக்தித்துறை விஞ்ஞானிகள் பலர் கொல்லப்பட்டிருந்தனர்.

## ரஸ்ய கடற்படைத்தளம் மீது தாக்குதல் – தரையிறங்கு கப்பல் அழிந்தது




ரஸ்ய கடற்படையின் கிரைமியாவில் உள்ள கருங்கடல் பகுதி கடற்படை பிரிவில் அங்கம் வகித்த மிகப்பெரும் ரொபுச்சா வகை தரையிறங்கு கலமான நொவொசெகஸ்க் பி.டி.கே 46 என்ற கப்பல் பொடோசியா பகுதியில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை(26) தாக்குதலுக்கு உள்ளாகி சேதமடைந்துள்ளதாக ரஸ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் இன்று தெரிவித்துள்ளது.

ஆனால் வெளியாகிய காணொளிகளின் அடிப்படையில் வெடிப்பதிர்வைத் தொடர்ந்து அங்கு மிகப்பெரும் தீ ஏற்பட்டு சுவாலைவிட்டு எரிவது அவதானிக்கப்பட்டுள்ளது.

300 தொடக்கம் 500 கி.மீ தூரவீச்சுக்கொண்ட பிரித்தானியாவின் ஸரோம் சடோ ஏவுகணை மற்றும் ஜேர்மனின் SCALP-EG ஆகிய ஏவுகணைகளை தாங்கிச் சென்ற உக்ரைனின் இரண்டு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## உலகின் எரிபொருள் விநியோகத்திற்கு அமெரிக்கா தடையாக உள்ளது



ஆர்ட்டிக் எல்.என்.ஜி-2 என்ற எரிபொருள் விநியோகத் திட்டத்திற்கு அமெரிக்கா விதித்துள்ள தடை என்பது உலகின் எரிபொருள் விநியோக திட்டத்திற்கு மிகப்பெரும் அச்சுறுத்தாலக உள்ளதக ரஸ்யாவின்வெளிவிவகாரஅமைச்சகம் கடந்த புதன் கிழமை(27) தெரிவித்துள்ளது.

மொஸ்கோவின் பொருளாதாரத்தை சீரழிப்பதற்கு அமெரிக்கா முயன்று வருகின்றனது. அதன் மூலம் உக்ரைனில் ரஸ்யா மேற்கொண்டுவரும் போரில் பாதிப்புக்கள் ஏற்படலாம் என அது நம்புகின்றது.

இந்த புதிய எரிவாயுத் திட்டம் கைடன் வளைகுடாவில் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

## கடல்சார்ந்த பாரம்பரியமும் இலட்சிய உறுதியும் தலைவர் பிரபாகரனுக்குப் பேராண்மை தந்தன

**ஐங்கரநேசன்**

*கடல் வாழ்க்கை நில வாழ்க்கையை விடச் சவால்கள் நிறைந்தது. கடலில் போனால் திரும்பி வருவோமா என்று தெரியாத நிச்சயமற்ற வாழ்க்கை மரண பயத்தை அறவே இல்லாததாக்கியது. சூறைக் காற்றுக்கும் கொந்தளிக்கும் அலைகளுக்கும் எதிராக மேற்கொள்ளும் பயணம் பெரும் பயிற்சியாக அமைந்து உடலையும் மனதையும் வலுவாக்கியது.*

*நிச்சயமற்ற வருவாய், பொருள் இழப்புக் குறித்த கவலையை இல்லாமல் ஒழித்தது. இக்கடல்சார் பாரம்பரிய குணவியல்புகளுடன் இலட்சிய உறுதியும் சேர்ந்து தலைவர் பிரபாகரனுக்குப் பேராண்மையைப் பெற்றுத் தந்தன. அவரால் கடலையும் நிலத்தையும் குறிப்பிட்ட காலம் வரையிலேனும் கட்டிக்காக்க முடிந்தது. இன்று அவர் இல்லை என்று கூறப்படும் நிலையில் சூறையாடப்படும் கடலைப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு நெய்தல் நில மக்களிடமே உள்ளது.*

*இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக் காட்டியுள்ளார். தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் கடற்கோள் நினைவுநாள் நிகழ்ச்சி மாதகல் விநாயகர் இறங்குதுறையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ.ஐங்கர நேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.*

*அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு -*

*“பூமியின் வெப்பநிலை மிக உயர்வாக இருந்த ஆண்டாக நடப்பு 2023 ஆம் ஆண்டு பதிவாகி உள்ளது. வரவிருக்கும் 2024 ஆம் ஆண்டில் பூமியின் வெப்பநிலை கைத்தொழில் புரட்சி ஆரம்பமானபோது இருந்ததை விட 1.5 பாகை செல்சியஸ் அளவில் உயரும் என்று விஞ்ஞானிகளால் எதிர்வு கூறப்பட்டுள்ளது. இது பூமியின் காலநிலையில் கடுமையான மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அஞ்சப்படுகிறது. பூமி சூடாகுவதால் காலநிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களால் நாம் ஏற்கனவே ஒருபுறம் கடும் மழையும் வெள்ளப் பெருக்கும், இன்னொருபுறம் கடும் வரட்சி, பனிமலைகளின் உருகுதல், கடல்மட்ட உயர்வு, பயிர் உற்பத்தி பாதிப்பு,உயிரினங்களின் அழிவு என்று பல பாதகங்களை அனுபவிக்க ஆரம்பித்துவிட்டோம்.*

*பூமியின் காலநிலையில் நிலத்தைவிட கடல் ஆற்றுகின்ற பங்களிப்புப் பெரியது. பூமியின் மீது சூரியனில் இருந்து வீழுகின்ற வெப்பத்தின் பெரும் பகுதியைக் கடல்தான் உறிஞ்சி வைத்திருக்கிறது. உறிஞ்சிய வெப்பத்தைச் சமுத்திர நீரோட்டங்களின் மூலம் பூமி முழுவதும் சமனாகப் பரவச்செய்கிறது. பூமியைச் சூடுபடுத்தும் கரியமில வாயுவைத் தன்னுள் ஈர்த்துக் கரைத்துவைத்திருக்கும் மிகப்பெரும் காபன் தொட்டியாகச்செயலாற்றுகிறது.*

*கடல்தான் பூமியின் சூட்டைத் தணிவிக்கும் மழை பொழிவதற்குக் காரணமாகவும் உள்ளது. ஆனால் கடலின் இருப்பும் உயிர்ப்பும் தான் எமது இருப்பும் உயிர்ப்பும் என்று தெரியாத நாம் கடலை மெல்ல மெல்லச் சாகடித்துக் கொண்டிருக்கிறோம். எமது பொருத்தமற்ற மீன்பிடி முறைகளாலும் அளவுக்கு அதிகமான மீன்பிடியாலும், கடலட்டை வளர்ப்புப் போன்ற ஒற்றையினப் பண்ணைகளாலும் கடலில் மீன் இனங்கள் அழிந்து வருகின்றன. இன்று கடலில் மீன்களை விடப் பிளாஸ்ரிக் துகள்களே அதிகமாகக் காணப்படுகின்றன. கடலில் அதிக அளவில் பிளாஸ்ரிக்கைத் தள்ளிக் கொண்டிருக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 14 ஆவது இடத்தில் உள்ளது.*

*கடலை எமது கழிவுகளைக் குவிக்கும் ஒரு குப்பைத் தொட்டியாகவே நாம் பாவித்துக் கொண்டிருக்கின்றோம். சூழல் மாசுபாட்டால் ஒட்சிசன் குறைவு ஏற்பட்டுப் பல இடங்களில் கடல் இறக்கத் தொடங்கியுள்ளது என்று கடலியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். கடல்தான் காநிலை மாற்றப் பாதகங்களைத் தடுக்கும் கேடயம் என்பதை உணர்ந்து*

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## 2023 இன் நீதிக்கான சாதக நிலைகளை 2024 இல் இறைமைக்கான ஆதரவாக்குவோம்

முதலில் அனைவருக்கும் 2024 பாதுகாப்பான அமைதி வாழ்வு தரும் ஆண்டாக அமைய இலக்கு ஆசிரிய குழு 01.01.2024இல் தொடங்கும் ஆங்கிலப் புத்தாண்டுக்கான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது. 2024 உலகப் போராண்டாக மாறலாம் என்னும் நியாயமான அச்சம் பலமாக உள்ள நிலையில் 2023ம் ஆண்டு நிறைவு பெறுகிறது. இஸ்ரேலின் பலஸ்தீன மக்கள் மேலான படையெடுப்பு 2024இல் ஏழுமுனை யுத்தமாகப் பரிணாமம் அடையும் என்னும் எதிர்பார்ப்பை இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோகவ் காலன்ட் (Yoav Gallant) இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். காசா, லெபனான், சிரியா, யூதா மற்றும் சமாரியா (வெஸ்ட் பாங்க்கு யூதப்பாரம்பரியப் பெயர்) ஈராக், யேமன், ஈரான் என்னும் ஏழு முனைவாக்கம் போரில் பரிணாமம் அடையலாம் என அவர் தெரிவித்துள்ளார். இவற்றில் ஆறு பயமுறுத்தல்களுக்குத் தாம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் இஸ்ரேலிய மக்களுக்கு நம்பிக்கையூட்டியுள்ளார். 20600 உயிர்களின் இழப்புக்கும் 55000 பேர் படுகாயமடைவதற்கும் பலஸ்தீனியர்களின் 85 வீதமான நிலப்பரப்பில் இருந்து 2.3 மில்லியன் மக்களை வெளியேற்றியும் 26.12.2023இல் உலகில் 21ம் நூற்றாண்டின் மிகப்பயங்கரமான யுத்தம் என பலஸ்தீனியர்கள் மீதான இஸ்ரேலின் மக்கள் மேலான யுத்தம் அமைந்துள்ளது. 07.10.2023இல் காமாசின் தாக்குதலால் 1140 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டு 250 இஸ்ரேலியர் பணயக்கைதிகளாக்கப்பட்டுத் தொடங்கப் பெற்ற இந்த யுத்தக் களம் 2024இல் உலகின் அமைதிக்கும் பாதுகாப்புக்குமான அச்சமாக வளர்ச்சி பெற்று வருகிறது. கூடவே ரஸ்யா உக்ரேன் மேல் பன்நிலை தாக்குதல்களை அதிகரிப்பதுடன் மட்டுப்படுத்தப்பட்ட அணுவாயுதத் தாக்குதல்களை அணுவாயுத இருப்பினைக் கொண்டிராத உக்ரேனுக்கு உதவியளிக்கும் நாடுகள் மேலும் விரிவுபடுத்தும் என எச்சரித்துள்ளமையும் 2024 உலகப்போராண்டாக மாறும் என்கின்ற அச்சத்தை மேலும் வளரச் செய்கிறது. மேலும் காலநிலை மாற்றப் பிரச்சினைகளால் அதிக பாதிப்புள்ள உலக நாடுகளில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ள இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இதில் அதிக பிரச்சினையைச் சந்திக்கும் என்ற அறிவார்ந்த அறிவிப்பை இப்பகுதி மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்ற ஆபத்து முன் முகாமைத்துவமின்றி, சிறிலங்கா தங்கள் நிலத்தைக் கடலை விற்றுப் பிழைக்கும் சூழலில் இம் மக்கள் தவிக்கின்ற நிலையில், சிறிலங்கா அரசாங்கத்தின் இன்றைய வெளிவிவகாரக் கொள்கைகளால் வடக்கு கிழக்குக்கு இந்துமாக்கடல் பகுதி உலகப் போர்க்களமாக மாறும் அபாயத்தையும் உடையதாகிறது. இவற்றுக்கு முகங்கொடுக்க உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்களின் அறிவையும் ஆற்றல்களையும் நிதிவளத்தையும் கூட்டொருங்குப் படுத்தும் ஈழத்தமிழர் கல்வித் தொழில்நுட்ப வர்த்தகப் பேரவை 2024இன் தேவையாகிறது என்பது இலக்கின் முதல் எண்ணமாகவுள்ளது.

மேலும் ஈழத்தில் தை பிறந்ததுமே புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை சிறிலங்காப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுதன் மூலம் 1979ம் ஆண்டு முதல் இனஅழிப்புக்குச் சட்டத் தகுதியளிக்கும் தன் செயலை மீளுருவாக்கம் செய்யும் நேரத்தில், ‘இமாலயப் பிரகடனம்’ என்னும் உலகத் தமிழர் பேரவையினதும் கனடிய காங்கிரசினதும் பிரகடனம், ஈழத்தமிழர்களுக்கு ஏற்படுத்தியுள்ள மோசமான விளைவுகளைத் ‘தமிழ் மக்கள் அடைய வேண்டிய இலக்குகளை குறைமதிப்பிற்கு உள்ளாக்குவதுடன் இலங்கையின் யுத்தக்குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்கு உதவும் பிரகடனமாகவும் இது மாறியுள்ளது. இந்தப் பிரகடனம் சிறிலங்காவின் நீதி பொறுப்புக்கூறல் என்ற இலக்கில் ஒரு அடி பின்னோக்கிய நடவடிக்கை" என்னும் கனடாவின் பிரம்டன் மேயர் மதிப்புக்குரிய பட்ரிக் பிரவுன் அவர்களின் கடுமையான கண்டனம் உலகுக்குத் தெளிவாக்கியுள்ளது. மேலும் அவர் "கனடாவின் பிரம்டன் நகரமும் அனைத்து நிர்வாகங்களும் தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளானர்கள் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளன. இங்கு வாழும் தமிழர்கள் இலங்கையில் நிகழும் இனப்படுகொலைகளில் இருந்து தப்பியோடி வந்துள்ளனர். 2009 இல் இனப்படுகொலை நடந்த காலம் முதலாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட மிகவும் கொடூரமான குற்றங்களுக்கு நீதியும் பொறுப்புக் கூறலும் அவசியம் என நான் வலியுறுத்தி வருகின்றேன். இலங்கையில் நீதி, பொறுப்புக்கூறல் இன்றி அமைதி சமாதானம் என்பன சாத்தியமில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆதாரங்களைச் சேகரித்து வருவதுடன் இலங்கையின் யுத்தக்குற்றவாளிகளுக்கு எதிரான விசாரணைகள் உட்பட்ட சாத்தியமான மூலோபாயங்களை முன்வைக்கவுள்ளது. எனினும் உலகத் தமிழர் பேரவை கனடிய தமிழ்க் காங்கிரசின் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் ஒருவருடன் இணைந்து தமிழ் மக்களின் அடைய வேண்டிய இலக்குகளை குறைமதிப்பிற்கு உள்ளாக்குவதுடன் இலங்கையின் யுத்தக்குற்றவாளிகளைக் காப்பாற்றும் யோசனை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளதுடன் தமிழ் மக்களுக்கு எதிரான மிகமோசமான குற்றங்களுக்காகக் கனடாவில் தடைசெய்யப்பட்டுள்ள யுத்தக் குற்றவாளியும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்சாவுடன் இணைந்து படமெடுத்துக் கொண்டமை மிகுந்த அதிர்ச்சியை அளிக்கிறது", எனத் தெரிவித்துள்ளார். ஈழத்தமிழர்கள் எதை உலகுக்குச் சொல்ல நினைத்தார்களோ அதனை கனடாவின் பிரம்டன் மேயர் மதிப்பிற்குரிய பட்ரிக் பிறவுண் அவர்கள் உண்மையும் நேர்மையும் மிக்க அவரது வார்த்தைகளால் உலகுக்குத் தெளிவாக்கியுள்ளார். அத்துடன் கனடாவில் கொன்சர்வேடிவ் கட்சித் தலைவர் மதிப்புக்குரிய பியர் பொலியர் தாங்கள் ஆட்சி அமைத்தால் அனைத்துலக நீதிமன்றத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகக் கனடாவின் வெளிவிவகார அமைச்சின் சட்டத்தரணிகளைப் பயன்படுத்துவோம். இதன் வழியாக சிறிலங்கா அரசாங்கத்தின் இனப்படுகொலையாளர்களை இனம் கண்டு அவர்களை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு உட்படுத்தலாம் என மிகத் தெளிவாக நம்பிக்கை தெரிவித்துள்ளார். அத்துடன் கொன்சர்வேடிவ் முன்னாள் பிரதமர் மதிப்புக்குரிய பிரைன் முல்ரோனி அவர்கள் 1980களில் ஈழத்தமிழர்கள் பெருமளவில் கனடாவுக்கு அரசியல் புகலிடம் கோரி வந்த பொழுது அவர்களை வரவேற்றமையையும், அவ்வாறே கொன்சர்வேடிவ் முன்னாள் பிரதமர் மதிப்புக்குரிய கார்ப்பர் அவர்களே சிறிலங்காவுக்கு எதிரான அனைத்துலகத் தடைகளை விதித்து அதன் தொடர்ச்சியாக கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளாது மகிந்த ராஜபக்சா அரசாங்கத்தை உலகின் முன் அவமானப்படுத்தியது என்றும் கூறி தற்போதும் இனப்படுகொலையில் ஈடுபட்ட சிறிலங்காவின் உறுப்பினர்களுக்கு எதிராக மக்னிட்ஸ்கி தடைகளை விதிப்பது தன் திட்டமெனவும் அத்துடன் இப்பொழுதும் தொடர்ந்து கொண்டிருக்கும் தமிழர்களுக்கு எதிரான சிறிலங்காவின் இனப்படுகொலை நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்தும் கண்டனம் தெரிவித்துச் சிறிலங்காவை மேலும் தனிமைப்படுத்துவோம் எனவும் சொல்லில் உறுதிபடக் கூறினார்.

இவ்வாறாக 2023இல் ஈழத்தமிழர்களுக்கான நீதிக்கான பல சாதகநிலைகள் வளர்ச்சி பெறத் தொடங்கியுள்ள நேரத்தில் 2024 ஐ இவற்றை ஈழத்தமிழர்களுடைய இறைமைக்கான உலக ஆதரவாக மாற்றுவதற்கான பொறிமுறைகளை உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் ஒருங்கிணைப்பாகி கூட்டொருங்கு தலைமைத்துவத்துவத்தின் வழி முன்னெடுக்க வேண்டும் என்பதே இலக்கின் வேண்டுகோள். அத்துடன் சிறிலங்கா அரசாங்கம் 2024 ஐத் தேர்தல் ஆண்டாக அமைத்து ஈழத்தமிழர் இறைமையுடன் கூடிய தேசியப் பிரச்சினையை அதற்குரிய முறையிலில்லாது சிங்கள நாட்டில் பௌத்த ஆகமச் சட்டத்தின் கீழ் வாழும் ஒரு சமுதாயத்தின் பிரச்சினையாக 2026 இல் பார்க்கப்படும் எனத் தெளிவாகத் தெரிவித்துள்ளது. இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தங்கள் இறைமையை உலகுக்குத் தெளிவுபடுத்த தேர்தலை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக உள்ளது. உலகளாவிய ஈழத்தமிழர் தேசமாக எழுந்தே இவற்றுக்கான உரிய செயற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதையும் இலக்கு வலியுறுத்திக் கூறவிரும்புகிறது.

**ஆசிரியர்**

# விஜயகாந்தின் அரசியலில் ஈழத் தமிழர் பிரச்சினை



அகிலன்

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான தமிழகத்தின் முன்னணி ஆளுமைகளில் ஒருவரை தமிழினம் இந்த வாரம் இழந்திருக்கின்றது.

பிரபல நடிகரும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் தலைவருமான விஜயகாந்தின் மரணம் தமிழக அரசியலில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஈழத்தமிழர்கள்மத்தியிலும்அவரதுமறைவு அதிர்ச்சியையும் சோகத்தையும் உருவாக்கியுள்ளது. நெருக்கடிகள் நிறைந்த ஒரு காலகட்டத்தில் தமக்காக அவர் களமிறங்கியதை ஈழத் தமிழர்கள் நன்றியுடன் நினைவுகூருகின்றார்கள்.



குறுகிய காலத்துக்குள் அரசியலில் உச்சத்துக்கு வந்து, ஈழத் தமிழருக்கான போராட்டங்களிலும் கவனத்தைச் செலுத்திய விஜயகாந், தனது உடல் நலனில் அதிகளவு கவனத்தைச் செலுத்தியிருந்தால், தமிழகத்தின் தவிர்க்க முடியாத ஒரு சக்தியாக உருவாகியிருப்பார்.

ஜெயலலிதா, கருணாநிதி போன்ற பெரிய ஆளுமைகளின் செல்வாக்குக்கு தமிழக அரசியல் சென்றுகொண்டிருந்த ஒரு பின்னணியில், அரசியலில் குதித்து எதிர்க்கட்சித் தலைவர் என்ற பெறுமதிவாய்ந்த பதவியையும் பெற்றுக் கொண்ட அவர், தமிழக அரசியலில் தவிர்க்க மடியாத ஒரு மூன்றாவது சக்தியாக தன்னை உயர்த்திக்கொண்டவர் வஜயகாந்த்.

அரசியலில் விஜயகாந்த் உச்சத்துக்கு வருவார் என்ற எதிர்பார்ப்பு அப்போது தமிழர்கள் மத்தியில் மட்டுமன்றி, அவரை எதிர்த்த அரசியல் சக்திகள் மத்தியிலும் ஏற்பட்டிருந்தது. இரண்டு பிரதான திராவிடக் கட்சிகளுமே அவரது கடைக்கண் பார்வைக்காக ஏங்கிய ஒரு காலம் இருந்தது. ஆனால், அவர் உருவாக்கிக் கொண்ட அரசியல் கூட்டணிகளும், அவரது உடல் நிலையும் அந்த உச்சத்தை அவர் தொடுவதற்குத் தடையாக இருந்துவிட்டது.

### கறுப்பு எம்ஜிஆர்

விஜயகாந்தை அவரது ஆதரவாளர்கள், "கறுப்பு எம்.ஜி.ஆர்." என்றே அழைப்பார்கள். இதற்கு பல காரணங்கள் இருந்தன.

எம்.ஜி.ஆரைப் போல திரைப்படங்களில் நடிக்கும் போதும் சில கொள்கைகளை அவர் கடைப்பிடித்தமை இதற்கு முதலாவது காரணம். திரைப்படங்களில் எப்போதும் அவர் கதாநாயகனாகவே நடித்தார். ஒருபோதும் வில்லனாக நடிக்காதவர். அதேவேளையில், தன்னுடைய கருத்துக்களை மக்கள் முன்கொண்டு செல்வதற்கும் திரைப்படங்களைப் பயன்படுத்துவதில், எம்.ஜி.ஆர். வழியைப் பின்பற்றியவர் விஜயகாந்த்.

எம்ஜிஆர் திமுகவில் இருந்து வெளியேறிய பின்னர், தனது ரசிகர் மன்றங்கைள ஒருங்கிணைத்து அதிமுகவை தொடங்கினார். அதே பாணியில் தன்னுடைய ரசிகர் மன்றம் மூலம் தனது அரசியல் செல்வாக்கை நிலைநிறுத்தியவர் விஜயகாந்த்.

அரசியலில் குதிப்பதற்கு பல நடிகர்களுக்கு விருப்பம் இருந்த போதிலும், அதற்கான துணிச்சல் அவர்களில் பெரும்பாலானவர்களிடம் இருக்கவில்லை. ஒரு சிலர் தம்மால் முடியும் என எதிர்பார்த்து அரசியலில் குதித்து மண்ணைக் கவ்வினார்கள். அந்த வகையில், எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவுக்குப் பின்னர் துணிச்சலுடன் அரசியலில் இறங்கி சாதித்தவர் விஜயகாந்த் மட்டும்தான்.

எம்.ஜி.ஆர். போல விஜயகாந்த்தும் ஒரு கொடை வள்ளல். மக்களுக்கு - குறிப்பாக ஏழைகளுக்கு உதவுவதில் எம்ஜிஆர் போல விஜயகாந்தும் பின்நிற்பதில்லை.

இவை அனைத்தும்தான் "கறுப்பு எம்ஜிஆர்" என விஜயகாந்தை அவரது ஆதரவாளர்கள் அழைப்பதற்குக் காரணம். இதன்மூலமாக எம்ஜிஆர் ரசிகர்களின் ஆதரவையும் அவர் தக்கவைத்தார் என்பதும் உண்மை.

### ஈழத் தமிழ் உணர்வாளர்

ஈழத் தமிழர்களுக்கான ஆதரவை வெளிப்படுத்துவதிலும் எம்.ஜி.ஆர். போலத்தான் அவர் துணிச்சலுடன் பல விடயங்களை முன்னெடுத்தார்.

1984 இல் ஈழத்தமிழர் படுகொலையை கண்டித்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட விஜயகாந்த், ஆளுநரை சந்தித்து மனு அளித்தார். 1986-ம் ஆண்டிலும் ஈழத் தமிழர் விவகாரம் தொடர்பாக சென்னையில் விஜயகாந்தும், அவரது ரசிகர்மன்றத்தினரும்தமிழகம்முழுவதும்உண்ணாவிரதம் இருந்தனர். அப்போது, அவர் அரசியலில் பிரவேசித்திருக்கவில்லை. ஒரு நடிகராகவே இவ்வளவையும் அவர் மேற் கொண்டார்.

எம்ஜிஆர் அளவுக்கு செய்யாவிட்டாலும் கூட, ஈழத் தமிழர்களின் விடுதலையை உணர்வும் உயிருமாய் உளப்பூர்வமாய் ஆதரித்தவர் விஜயகாந்த். அவரது நூறாவது படத்துக்குப் பெயர் "கப்டன் பிரபாகரன்". அந்தப் படத்தில் நடித்த பின்னர்தான் "கப்டன்" என்ற என்ற அடைமொழி அவரது பெயருக்கு முன்பாக நிரந்தரமாக ஒட்டிக்கொண்டது என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

தனது மூத்த மகனுக்கு விஜய் பிரபாகரன் என்று பெயர் சூட்டியவர் விஜயகாந்த். ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் மீது அவருக்கு இருந்த ஈடுபாடு மற்றும் பற்றுதலின் காரணமாகவே இதனை அவர் செய்திருந்தார்.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டு இரண்டு வருடங்களின் பின்னர்தான் விஜய் பிரபாகரன் பிறந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது. ஈழத் தமிழர்களுடன் தமது ஈடுபாட்டை வெளிப்படுத்துவதற்கே தமிழக அரசியல் சக்திகள் அச்சமடைந்திருந்த ஒரு காலத்தில் பிரபாகரன் என்ற பெயரை அவர் தனது மகனுக்கு துணிச்சலுடன் சூட்டினார்.

ஈழத் தமிழர்களுக்காக தனது பிறந்த நாள் கொண்டாட்டத்தையும் விஜயகாந்த தவிர்த்தார். ஈழத் தமிழர்கள் தவிக்கும் ஒரு காலத்தில் நான் எப்படி கேக் வெட்டி பிறந்நாளைக் கொண்டாடுவது என்ற கேள்வியையும் அவர் எழுப்பியிருந்தார்.

இந்த வகையில் உணர்வுபுர்வமாக ஈழத்த தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்ட விஜயகாந்த், பின்நாட்களில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக களத்தில் இறங்கவில்லை என்ற ஒரு கருத்து, தமிழ்த் தேசிவாதிகளால் முன்வைக்கப்படுகின்றது. அவரது உடல் நிலையும், அவர் அரசியலுக்காக அமைத்துக்கொண்ட கூட்டணிகளும் இவ்விடயத்தில் செல்வாக்கை செலுத்தியிருக்கலாம்.

### மக்களுடன்தான் கூட்டணி

ரசிகர் மன்றங்கள் மூலமாக அரசியலில் பிரவேசித்து தனக்கென தனியான ஒரு பாதையை வகுத்துக்கொண்ட அவர், ஆரம்பத்தில் இருந்தே தேர்தல் கூட்டணிகள் எதனையும் அமைத்துக்கொள்வதை விரும்பவில்லை. தேர்தல் காலங்களில் இது தொடர்பாக வேள்வி எழுப்பப்படும் போது, "மக்களுடன்தான் நான் கூட்டணி. எந்தக் கட்சிகளுடனும் கூட்டணி அமைக்கப்போவதில்லை" என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

கட்சி தொடங்கிய ஓராண்டிலேயே 2006 இல் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் தனித்து 232 தொகுதிகளிலும் வேட்பாளர்கைள நிறுத்தினார். தனது சொந்த ஊரான மதுரையில் விஜயகாந்த் போட்டியிடுவார் என அனைவரும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இமாலயப் பிரகடனம் - பின்னணியும் வரலாறும்

அரசியல் ஆய்வாளர் **நிக்சன்**

அதிகளவு சிங்கள உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை ஒற்றை ஆட்சி நாடாளு மன்றத்தில் ஈழத்தமிழர் தேசியச் சிக்கலுக்குரிய தீர்வை முன்வைக்க முடியாது என்பதாலேயே 'ஈழத்தமிழர் தேசியம்' என்ற கோட்பாடு எழுந்தது. சிங்களவர் ஈழத்தமிழர் ஆகிய இரு அரசியல் சமூகங்களும் தேசங்களாக ஒற்றையாட்சி நாடாளுமன்றத்திற்கு வெளியே கூட்டாக நின்று நிர்வாக அதிகாரத்தை அல்ல ஆட்சி அதிகாரத்தைப் பங்கிடுவதன் மூலமே இனப்பிரச்சினைக்குரிய நிரந்தர அரசியல் தீர்வை எட்ட முடியும்.

இதற்கான கூட்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தமிழ்த் தேசியக் கட்சிகள் தனித்தனியாகச் செயற்பட்டு ஒற்றையாட்சி நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றும் வியூகங்களுடன் மாத்திரம் இயங்கி வருவதால் மிகவும் பலவீனமான நிலைமை அதல பாதாளமாக வெளித் தோற்றத்துக்குத் தெரிகிறது.

ஆனால், மக்கள் மட்டத்தில் நீறுபூத்த நெருப்பாக தேசிய நிலைப்பாடு வேரூன்றியுள்ளது.

இந்தச் சூழலில் புலம்பெயர் அமைப்பு களின் கூட்டு என்று தவறாகக் கூறிக் கொள்ளும் சில தனிநபர்களின் கூட்டு ஒன்று வல்லாதிக்க நாடுகளின் புவிசார் அரசியல் - பொருளாதார நலன்களைக் கருத்திற்கொண்டு இயங்கும் தன்னார்வ சக்திகளால் தயார்ப்படுத்தப்பட்டு மக்கள் மயப்பட்ட தேசிய நிலைப்பாட்டை நிலைமாறச் செய்யும் கைங்கரியத்தில் ஈடுபடுத்தப் பட்டுள்ளது. இதுவே உலகத் தமிழர் பேரவை.



'யதார்த்த அரசியல்' என்று பேசுவோரும் 'முற்போக்குத் தமிழர்' மற்றும் 'மிதவாத அரசியல் தலைவர்கள்' என்று மார் தட்டுவோரும் 2009 மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் மிதமிஞ்சியுள்ள தன்மையைப் பயன்படுத்தி ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நுட்பமாக மறுதலிக்கவும், 'இன நல்லிணக்கம் 'மத நல்லிணக்கம்' என்ற போர்வையில் மீண்டும் இணக்க அரசியற் பொறிக்குள் ஈழத்தமிழர் தேசிய அரசியலைத் தள்ளிவிடவும் வெளிப்பட்டுள்ளார்கள். இது ஒன்றும் புதிய போக்கு அல்ல. பழைய பொறிகளின் புதிய தொடர்ச்சியே.

2015 மைத்திரி-ரணில் அரசாங்கத்தில் ஆரம்பித்த இந்த 'நல்லிணக்கப் பொறி' கோட் டாபய ராஜபக்ச 2020 இல் ஜனாதிபதியான பின்னர் வேறொரு வடிவை எடுத்தது. தமது திட்டங்களுக்கு ஒத்துழைக்க கோட்டபாய மறுத்தபோது ஆட்சி மாற்ற வேலைத்திட்டத்துக்கு சிங்களத் தரப்புகள் தயார்ப்படுத்தப்பட்டன. அதற்கு தமிழர்களுக்கான சர்வதேச நீதியும் அரசியல் தீர்வும் கிடப்பில் போடப்பட்டது.

போலித் தன்மையுள்ள நல்லிணக்கம் என்ற பொருத்தமற்ற கதைக்கும், சென்ற மாதம் போலியாக சித்திரிக்கப்பட்ட துவாரகாவின் பெயரில் வெளியான மாவீரர் நாள் அறிக்கைக்கும் ஒரே பின்புலம் இருப்பது வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ தெரியாது விட்டாலும் இவை இரண்டுக்கும் பின்னால் மறைமுகமான சக்திகள் பின்னணி என்பது பட்டவர்த்தனம்.

குறிப்பாக 2009 இற்குப் பின்னரான சூழலில் மேற்குலகின் புவிசார் அரசியல் பொருளாதார நலன்களைக் கருத்திற்கொண்டு அரசுகளுக்கும் அவற்றின் தூதரகங்களுக்கும் அப்பால் ஆனால் அதே நலன்களுக்கு ஏற்பச் செயற்படும் பிராந்திய, சர்வதேச மற்றும் உளவு மற்றும் தன்னார்வ நிறுவனங்களின் செயற்பாடுகள் ஊடாக விளைந் ததுதான் இந்த இமாலயப் பிரகடனம்.

சுரேன் சுரேந்திரன் என்பவரின் தலைமை யிலான உலகத் தமிழர் பேரவை என்ற தனிமனிதர் குழு இந்தச் சர்வதேச தன்னார்வ நிறுவனங்களின் தேவைக்கு இயைந்துள்ளது கண்கூடு.



சிறந்த இலங்கைக்கான சங்கபீடம் (Sangha for Better Sri Lanka) என்ற அமைப்பும் சுரேந்திரனின் திட்டத்துடன் இணைந்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் அப்போதைய அமைச்சரான மறைந்த மங்கள சமரவீரவின் மறைமுக அனுசரணையுடன் இலங்கைக்கு வந்து சில பௌத்த துறவிகளுடன் சுகாதார வேலைத்திட்டங்களில் ஈடுபட்ட புலம்பெயர் ஈழத்தமிழர் தனிநபர்ச் செயற் பாட்டாளர் குழுக்கள் அப்போதே தயார்ப்படுத்தப் பட்டிருந்தன.

சுயநிர்ணய உரிமையைக் கைவிடுதல், இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை தொடர்பான கோரிக்கைகளைத் தவிர்த்தல், இலங்கை அரச கட்டமைப்புக்குள் ஐக்கியம் என்ற பெயரில் ஒற்றையாட்சிக்குள்ளும் ஒத்துப்போதல் மற்றும் ஈழத்தமிழர் என்ற அடையாளத்தைக் கைவிட்டு இலங்கையர் என்ற அடையாளத்தைத் தழுவுதல் போன்றவற்றுக்குத் ஈழத் தமிழ்த்தேசியக் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளை இணங்க வைப்பது இந்தத் தன்னார்வ நிறுவனங்களின் உத்திகளில் ஒன்று.

இதனை அடிப்படையாகக் கொண்டு வெளிநாடுகளில், குறிப்பாக ஜேர்மனி, சுவிற்சர் லாந்து, ஒஸ்ரியா, ஸ்கண்டிநேவிய நாடுகளில் 2009 ஆம் ஆண்டின் பின்னர் அவ்வப்போது கூட்டங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டிருக்கின்றன.

இக் கூட்டங்களில் தமிழரசுக் கட்சி யின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட பல தாயக அரசியற் தலைவர்களும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் என்ற பெயரில் இயங்குபவர்களும் மற்றும் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் சுரேன் சுரேந்திரன், பிரித்தானியத் தமிழர் பேரவையின் தலைவர் ரவி குமார் (ரூட் ரவி) மற்றும் தாயக சிவில் சமூகச் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான கலாநிதி குமாரவேல் குருபரன் உள்ளிட்டோர் இக் கூட்டங்களில் பங்குபற்றியிருக்கின்றனர்.

இவர்களில் ஒரு சாரார் மேற்கின் நலன்களுக்கு ஒத்துப்போய் தமிழர் நலன்களை ஆகுதியாக்கக் கூடியவர்கள். மறுசாரார் மேற்கின் நலன்களோடு ஒத்துப்போய் பேரம் பேசக் கூடியவர்கள். இரண்டு முனைகளுக்கும் மாறி மாறிப் பயணித்து தாம் யார் என்பதைத் தெளிவாகச் சமுதாயத்துக்கு அடையாளம் காட்டாதவர்களும் இவர்களுள் அடங்குவர். ஆகவே, எவர் எவர் எப்படிப்பட்டவர் என்ற விவாதம் இங்கு அவசியமற்றது. என்ன நடக்கிறது என்பதை உன்னிப்பாக விளங்கிக்கொள்வதே அடுத்த கட்ட நடவடிக்கைக்கு அவசியமானது.

2009 ஆம் ஆண்டின் பின்னர் நடந்த இக் கூட்டங்கள் வெவ்வேறாகவும், கூட்டாகவும் தனித் தனியாகவும் மிக இரகசியமான முறையில் மேற்கு நாடுகளின் நகரங்களில் விமானப் பயண மற்றும் தங்குமிட வசதிகளை வழங்கி நடத்தப்பட்டன. இக் கூட்டங்களில் பேசப்பட்ட விடயங்கள் எந்த ஒரு ஊடகங்களிலும் நேரடியாக வெளிவராது.

ஏனெனில், அவ்வாறு எழுதப்படக்கூடாது என்பது அக்கூட்டத்தை நடாத்திய தன்னார்வ நிறுவனங்களின் ஏற்பாட்டாளர்களால் நிலைப் பாடாக இருந்தது. எங்கே ஒளிவு மறைவாக இருக்க வேண்டும் என்பதே வெளிப் படைத் தன்மை பற்றி பேசவேண்டும் என்பதை ஏற்பாட்டாளர்களே கையாளுவர்.

ஆனாலும் கூட்டங்களில் பேசப்பட்ட விடயங்களை இந்தத் தன்னார்வ நிறுவனங்களின் ஏற்பாட்டாளர்கள் ஒரு விடயத்தில் குறியாக இருப்பர். பேசி உடன்பட்டவற்றை, அல்லது உடன்படாதவற்றைக் கூட ஏதோ ஒரு வகையில் ஒரு அறிக்கையாகத் தொகுத்துக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரின் ஒப்புதலைப் பெற்றது போல ஆவணப்படுத்திக் கொள்வர்.



இருந்தபோதும், இக் கூட்டங்களில் நடந்த பல விடயங்கள் வெளியே அரசல் புரசலாக அவ்வப்போது கசிந்திருக்கின்றன. இக் கூட்டங்களில் கலந்துகொண்ட சுரேன் சுரேந்திரன் போன்ற சிலரைத் தவிர்ந்த ஏனைய ஈழத்தமிழர் பிரதிநிதிகளுள் பலர் ஈழத்தமிழர்களின் அரசியல் பயணம் தொடர்பான பிரதான காரண-காரியங்களை விட்டுக்கொடுக்காமல் வலியுறுத்தி யும் வந்துள்ளார்கள்.

ஆனாலும் 'உங்கள் இலக்கு' அதாவது சுயநிர்ணய உரிமையின் பாற்பட்ட அரசியற் தீர்வு என்ற இலக்கை அடைவதற்கு கூட்டத்தில் தங்களால் முன்மொழியப்பட்ட விடயங்களை ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்றும் பின்னர் பையப்பைய உங்கள் இலக்கை அடைய முடியும் எனவும் இந்தத் தன்னார்வ நிறுவனங்கள் தமது போதனைகளாக அவ்வப்போது அறிவுறுத்தி வந்துள்ளன.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# 2023 – இன் நம்பிக்கைகள் பொய்க்க யார் காரணம்?

## அரசியல் ஆய்வாளர் யதீந்திரா

**2023 பிறக்கும் போது பல நம்பிக்கைகளை ஜனாதிபதி கொடுத்திருந்தார். இன நெருக்கடிக்கான தீர்வு. பொருளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்பன போன்ற வாக்குறுதிகள் அவரால் கொடுக்கப்பட்டது. இவைற்றுக்கு என்னதான் நடந்தது?**

*ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டில் உருவான அசாதாரணமான ஒரு பொருளாதார நிலையால் ஜனாதிபதியான ஒருவர். இன நெருக்கடிக்குத் தீர்வைக்காணப்போவதாகவும், அதற்கான ஆரம்பப் புள்ளியாக அரசியலமைப்பில் இருக்கின்ற 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப்போவதாகவும் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் கூறியிருந்தார். இதனால், ஆரோக்கியமான சில நகர்வுகள் இடம்பெறலாம் என தமிழர் தரப்பிலும் அங்காங்கே சில நம்பிக்கைகள் இருந்தன. எல்லோரும் அவ்வாறு நம்பினார்கள் என்றும் சொல்ல முடியாது.*

*ஆனால், ஜனாதிபதி சில விடயங்களைச் செய்யப்போவதாகச் சொல்லும் நிலையில், அது எவ்வளவு துாரம் செல்கிறது என்பதைப் பார்க்கவேண்டிய தேவை இருக்கின்றது என்ற அடிப்படையில், தமிழர்தரப்பு-குறிப்பாக தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவை இந்தப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்றிருந்தன. ஆனால், அவர் கூறியவாறு எந்த விடயங்களும் நடைபெறவில்லை. ஆகவே 2023 ரணில் விக்கிரமசிங்கவின் வாக்குறுதிகள் பொய்துப்போனதன் பதிவாக முடிவுக்கு வரப்போகின்றது.*

*தமிழ் அரசியலைப் பொறுத்தவரையில் இந்தியாவை நோக்கிச் செல்லவேண்டும் என்ற கருத்து 23 இல் வலுவடைந்துவருவதை காணமுடிகின்றது. 2022 இல் இது ஆரம்பமாகியது. 23 இல் இது மேலும் வலுவடைந்தது. தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்காக போட்டியிடுபவர்கள் கூட, நாம் இந்தியாவை நோக்கிச் செல்லாமல் விட்டது பெரிய தவறு என்ற அடிப்படையில் பேசுவதைக் காணமுடிகின்றது. அடுத்த ஆண்டு இந்த விடயத்தில் மேலும் சில முன்னேற்றத்தை நோக்கி அவர்கள் நகரக்கூடும்.*

*இவ்வருடத்தில் இந்தியாவுக்கு ஒரு குழுவினரும் சென்றுவந்திருந்தார்கள். அரசாங்கத்தின் அழைப்பில் அவர்கள் சென்றிருக்கவில்லை. ஒரு "லொபி" என்ற அடிப்படையில் அவர்கள் சென்றிருந்தார்கள். இவையெல்லாம் இந்த வருடத்தில் இடம்பெற்ற சில சம்பவங்கள். ஆனால், இவையெல்லாம் ஒரு தீர்வு நோக்கி எந்தவொரு நம்பிக்கையையும் விதைக்காமலேயே சென்றுள்ளது.*

**விடுதலைப் புலிகள் அமைப்பினால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இந்த வருடம் மற்றொரு பிளவு ஏற்பட்டது. தமிழரசுக் கட்சி தனியாகச் சென்றுள்ளது. ஐந்து கட்சிகளை இணைத்து ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனியான அணியாக குத்துவிளக்கு சின்னத்தில் சென்றுள்ளது. தமிழ் அரசியலில் இது எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது?**



**அரசியல், பொருளாதார ரீதியாக முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்ட 2023 ஆம் ஆண்டு முடிவுக்கு வருகின்றது. முடிவுக்கு வரும் இந்த வருடத்தில் இடம்பெற்ற சம்பவங்களின் பின்னணி என்ன, அடுத்த வருடத்தில் இதன் தொடர்ச்சி எவ்வாறிருக்கும் என்பவை தொடர்பாக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயககளம் நிகழ்வில் கலந்துகொண்டு தன்னுடைய கருத்துக்களை இந்த வாரத்தில் முன்வைத்திருக்கின்றார். அரசியல் ஆய்வாளரான யதீந்திரா அவர்களது நேர்காணலின் முக்கியமான பகுதிகளை இலக்கு வாசகர்களுக்காக தருகின்றோம்**

*தமிழ்த் தேசியத் தரப்பு கட்சி சார்ந்து சில முரண்பாடுகள் இருந்தாலும் கூட, ஒரு பொதுப் புள்ளியில் சந்திக்க வேண்டும் என்பதை பல்வேறு தரப்பினரும் தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றார்கள். அந்த வலியுறுத்தல்களுக்கு மாறாகத்தான் இந்தப் பிளவு இடம் பெற்றிருக்கிறது.*

*2009 க்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பல்வேறு முரண்பாடுகள் இருந்தது. ஆனால், அந்த முரண்பாடுகளையும் தாண்டி ஒரணியாகத்தான் அது பயணம் செய்தது. ஆனால், இந்த வருடத்தில்தான் தமிழரசுக் கட்சி உள்ளூராட்சி தேர்தலை இலக்காகக்கொண்டு தனியாகச் சென்றது. ஏனையவர்கள் குத்துவிளக்குச் சின்னத்தில் இயங்கி வருகின்றார்கள். இது தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஆரோக்கியமானதல்ல. இது பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வந்த விடயத்துக்கு மாறானது. ஆனால், அது நடைபெற்றிருக்கின்றது. அதனுடைய விளைவுகளை நாம் எதிர்காலத்தில்தான் பார்க்க வேண்டும்.*

**2022 இல் உருவாகி ஆட்சி மாற்றத்துக்கு காரணமாக இருந்த அரகலய என்ற பெயரிலான மக்கள் எழுச்சி இப்போது அடக்கப்பட்டு, ராஜபக்ஷக்கள் மீளெழுச்சி பெறுவது போன்ற ஒரு தோற்றம் காணப்படுகின்றது. அது எந்தளவுக்கு சாத்தியமானது?**

*இலங்கைத் தீவின் வரலாற்றின் ஊடாக நாம் பார்த்தால், அவர்களுடைய மீளெழுச்சி சாத்தியமற்றது என நாம் கூறிவிட முடியாது. ஏனெனில் 2015 இல் ராஜபக்ஷக்கள் தோற்கடிக்கப்பட்ட போதும், அவர்களால் மீளவர முடியாது என்ற கருத்துத்தான் முன்வைக்கப்பட்டது. ஏனெனில், பல்வேறு தரப்புக்களும் ஒன்றாக வந்துதான் அந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். ஆனால், அவ்வாறு நடக்கவில்லை. 2020 இல் முன்னதைவிட அதிகமான ஒரு வெற்றியை கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் அவர்களால் பெற முடிந்தது.*

*பொருளாதார நெருக்கடியின் விளைவாகத்தான் ராஜபக்ஷக்களுக்கு எதிரான போராட்டம் உருவானது. பொருளாதார நெருக்கடியை அரச தலைவராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவினால் எதிர்கொள்ள முடியாமல் போனபோது, அவர் மீது மக்களின் சீற்றம் திரும்பியது. அவர் ஆட்சி செய்வதற்கு பொருத்தமற்றவர் என சிங்கள மக்கள் மத்தியில் உருவான கருத்து போராட்டமாக வெடித்து அவர் ஆட்சியைவிட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது.*

*இப்போது ராஜபக்ஷக்கள் தங்களை ஒருங்கிணைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றார்கள். குறிப்பாக அடுத்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெறவிருக்கின்ற நிலையில், ராஜபக்ஷக்களின் செல்வாக்கைச் சோதித்துப் பார்க்கும் முதலாவது தேர்தலாக அது அமையப் போகின்றது. இந்த நிலையில் தம்மை தவிர்க்க முடியாத சக்தியாகக் காட்டிக் கொள்வதற்கான காய் நகர்த்தல்களைத்தான் அவர்கள் இப்போது மேற்கொண்டுள்ளார்கள்.*

*நிச்சயமாக அவர்களுடைய இலக்கு ஆட்சியைக் கைப்பற்றுவதாக இருக்கப்போவதில்லை. காரணம், தென்னிலங்கையில் இப்போது ஒரு தனிக் கட்சி முன்னிலை பெறுவதற்கான சூழ்நிலை இல்லை. அது அவர்களுக்கும் தெரியும். ஆனால், தம்மை தவிர்க்க முடியாத ஒரு சக்தியாகக் காட்டிக்கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்குள்ளது. ஏனென்றால், இலங்கை அரசியலைத் தீர்மானிப்பதில் சர்வதேச சக்திகள் முக்கியமான பங்கை வகிக்கும். தெற்காசிய நாடுகளில் இடம்பெறும் ஆட்சி மாற்றங்களில் இந்த புவிசார் அரசியல் அதிகளவு செல்வாக்கைச் செலுத்துகின்றது. அண்மையில் மாலைதீவில் ஏற்பட்ட மாற்றங்களை நாங்கள் பார்க்கலாம்.*

*இலங்கையிலும் இது போன்ற பிரச்சினை உள்ளது. இதனை ராஜபக்ஷக்கள் நன்கு அறிவார்கள். அந்தவகையில், தம்மைத் தவிர்க்க முடியாத ஒரு சக்தியாகக் காட்டிக்கொள்வது ஒன்றுதான் அவர்களுக்கு இருக்கக்கூடிய பாதுகாப்புக்கான ஒரு கவசமாகும். அந்தவகையில்தான் அவர்களுடைய நகர்வுகள் நிச்சயமாக அமையும். அவர்கள் எழுச்சியடைவதற்கான சாத்தியங்கள் இல்லை என்று சொல்லிவிட முடியாது. உடனடியாக அதில் சில சரிவுகள் இருந்தாலும் எதிர்காலத்தில் அவர்கள் எழுச்சியடைய மாட்டார்கள் என உறுதியாகச் சொல்லிவிட முடியாது. ஏனெனில் இலங்கைத் தீவின் வரலாறு இப்படித்தான் இருந்துள்ளது.*

• • •

# கிழக்கில் தமிழர்களுக்கு போராட்டம் நிறைந்த ஆண்டாக முடிந்த 2023

## மட்டு.நகரான்

ஆண்டுகள் மறைந்தாலும் தமிழர் தேசத்தில் தமிழர்களுக்கான விடிவு என்பது இல்லாமலே ஒவ்வொரு ஆண்டும் மறைந்து செல்கின்றது. தமிழர்களின் விடுதலைப் போராட்டமும் அவர்களின் வாழ்வியலும் நாளுக்கு நாள் கேள்விக்குட்படுத்தப் பட்டுவரும் நிலையிலேயே ஆண்டுகள் கடந்து செல்கின்றது.

வடகிழக்கு தமிழர்கள் அடுத்து ஆண்டு மலர்வதையும் ஏதோவொரு நம்பிக்கையுடனேயே எதிர்கொள்ளும் நிலைமையிருக்கின்றது.அடுத்த ஆண்டாவது எங்களது வாழ்வில் ஒளியேற்றப்படும் நிலைமையேற்படவேண்டும் என்பதே அவர்களின் நிலையான வேண்டுதலாகயிருந்துவருகின்றது.




இவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தில் புதிய ஆண்டை ஏதோவொரு நம்பிக்கையில் வரவேற்க தயாராகிவரும் நிலையில் கடந்த நாட்களில் தங்களுக்கு நேர்ந்த அனைத்து துன்பங்களும் நீங்கி தாங்கள் சுதந்திரமாக அனைத்து உரிமைகளையும் பெற்று எதிர்வரும் ஆண்டிலாவது வாழவேண்டும் என்று பிரார்த்தனை செய்துவருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் இந்த ஆண்டு பல துன்பங்களை சுமந்த நிலையிலேயே புதிய ஆண்டினை வரவேற்பதற்காக தயாராகிவருகின்றது.பௌத்த மயமாக்கல் என்னும் கொடிய ஆயுதம் கொண்டு தமிழர்கள் வஞ்சிக்கப்பட்டுவரும் நிலையில் அதற்கு எதிராகப் போராடிவரும் நிலையிலேயே புதிய ஆண்டில் இந்த போராட்டத்தினையும் முன் கொண்டுசெல்லும் எண்ணப்பாட்டுடன் புதிய ஆண்டினை எதிர்கொள்வதற்கு கிழக்கு தமிழர்கள் தயார் நிலையில் இருக்கின்றனர்.

இந்த ஆண்டு இந்த நாட்டில் தமிழர்கள் அடக்கப்பட்ட இனமாகவும் இருள்சூழ்ந்த இனமாகவும் வாழ்கின்றார்கள் என்பதை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டும் வகையில் இலங்கையின் சுதந்திர தினத்தை கறுப்பு சுதந்திர தினமாக மட்டக்களப்பு மக்கள் அனுஸ்டித்ததுடன் இலங்கை சுதந்திர தினத்தன்று தமிழர்களின் உரிமையினை வலியுறுத்தி போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்திருந்தனர்.



இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில், யுத்த வலயத்துக்கு உள்ளும் பின்னர் அகதி முகாம்களிலும் மக்கள் பேரழிவைச் சந்தித்துக் கொண்டிருந்த காலப்பகுதியில், இரண்டு கொம்பன் யானைகளைப் பற்றி, தெற்கில் உள்ள அரசியல்வாதிகள் கவலைப்பட்டுக் கொண்டிருந்த விடயம் நினைவிருக்கலாம். அவ்வாறான நிலையிலேயே இன்று தமிழர்களின் துன்பங்களின்போது தெற்கில் வேறுவிதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சமாதானம் தொடர்பிலும் இன சமத்துவம் பேசுகின்ற உலக நாடுகளும் நடுநிலைமை பற்றி வகுப்பெடுக்கின்ற அமைப்புகளும், அதற்கெதிராக உலகில் நடைபெறுகின்ற பல சம்பவங்களை ஒரு குறிப்பிட்ட தருணம் வரைக்கும் வேடிக்கை பார்த்துக் கொண்டே இருக்கின்றன.

குறிப்பாக கிழக்கில் இந்த ஆண்டு நடைபெற்ற பல தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் இதுவரையில் சிங்கள தேசம் தனது வேட்டையை கட்டுக் கடங்காமல் செய்துள்ளது.ஆனால் இந்த செயற்பாடுகளுக்கு எதிராக சர்வதேசம் மௌனமாக வேயிருந்துவருகின்றது.

இது தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியாக சர்வதேசம் தொடர்பான அதிருப்தியை கொண்டிருக்கும் நிலையினை காணமுடிகின்றது. இந்த ஆண்டு தொடக்கம் முதலே கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் அத்துமீறிய காணி அபகரிப்பு செயற்பாடுகள் தீவிரமடையும் நிலை ஏற்பட்டு அது இன்று வரையில் இடம்பெற்றுவருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் திருகோணமலை நகர்,புல்மோட்டை, கிண்ணியா, குச்சவெளி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் புத்த பிக்குகளின் தலைமையில் பாரியளவிலான காணி அபகரிப்புகள் முன்னெடுக்கப்பட்டன.பௌத்த விகாரை அமைத்தல் அதற்கு காணி வேண்டும் என்று தனியார்,அரச காணிகளை அத்துமீறி அபகரிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அதனை தடுப்பதற்கு தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்கவேண்டிய அவலம் காணப்படுகின்றது

இதேபோன்று இலங்கையின் தமிழர்களின் அடையாளமாகவும் பாரம்பரியமாகவும் இருக்கும் கன்னியா வெந்நீர் ஊற்று பகுதியை பௌத்தத்திற்கு சொந்தமானது என அறிவித்துள்ள இலங்கையின் தொல்லியல் திணைக்களம் அங்கு தமிழர்களின் அடையாளத்தை சிதைக்கும் முயற்சிகளை முன்னெடுத்துவரும் நிலையில் அதனை தடுப்பதற்கு பல்வேறு வழிகளில் தமிழர்கள் போராடி வருகின்றனர். இது போன்று திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் விகாரை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது தமிழர்கள் அதற்கு கடுமையான எதிர்ப்பினை தெரிவித்தனர்.

நூறு வீதம் தமிழர்கள் வாழும் இலுப்பைக்குளம் பகுதியில் தென்னிலங்கையிலிருந்து வகைதந்த புத்த பிக்குகள் விகாரை அமைக்க முற்பட்ட அதேநேரம் விகாரை அமைப்பதை தடுத்தற்காக மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தையே நடாத்த முடியாத வகையில் புத்த பிக்குகள் அராஜகம் செய்தனர்.

திருகோணமலையில் இவ்வாறு பௌத்த பிக்குகள் ஒருபுறம் தமது அராஜகங்களை முன்னெடுத்துள்ள நிலையில் சீனா, அமெரிக்கா,இந்தியா போன்ற நாடுகள் இங்கு தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிகளுக்கு எதிராக குரல்கொடுக்காமல் திருகோணமலையில் தமது இருப்புகளை தக்கவைப்பதற்கான முயற்சிகளையே முன்னெடுத்துவருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் இதே ரீதியான பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்த ஆண்டு மீண்டும் மயிலத்தமடு, மாதவனை பிரச்சினை பூதாகரமாக தோற்றம்பெற்றது.கடந்த காலத்தில் நீதிமன்ற உத்தரவுடன் வெளியேற்ற சிங்கள அத்துமீறிய குடியேற்றவாசிகள் மீண்டும் ஆக்கி\ரமிப்புகளை முன்னெடுத்த நிலையில் அவர்களுக்கு நீதிமன்றங்கள் ஊடாகவும் ஆர்ப்பாட்டங்கள் ஊடாகவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதிலும்இன்றுவரையில் தீர்வுகாணப்படாத விடயமாகவேயிருந்து வருகின்றது.

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட பகுதியிலும் கடந்த பெப்ரவரி மாதம் கால்நடை பண்ணையாளர்களின் காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.



சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களைக் கொண் நட டு முந்திரிகை செய்கை என்ற பெயரில் சிங்கள ஆக்கிரமிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டபோது அதற்கு எதிராக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னெடுத்த முயற்சிகள் காரணமாக ஒரு பகுதி காணி விடுவிக்கப்பட்டபோதும் சுமார் 200ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று போரதீவுப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட பண்ணையாளர்களின் காணிகளும் பறிக்கப்படுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அதற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு, அந்த முயற்சிகள் தடுக்கப்பட்டன.

இதேபோன்று வாகரை பிரதேசத்தில் இல்மனைற் தொழிற்சாலை அமைப்பதற்காக தென்பகுதியை சேர்ந்தவர்களுக்கு கதிரவெளி கடற்கரை பகுதியை தாரைவார்க்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் மட்டக்களப்பு மாவட்ட செயலயகத்தினை முற்றுகையிட்டு மக்கள் போராட்டம் நடத்திய நிலையில் அந்த நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

வடகிழக்கில் உள்ள விவசாயிகள் இந்த அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பிலும் வடகிழக்கு விவசாயிகளின் நிலைமையினை சர்வதேசம் அறியும் வகையில் ஏப்ரல் தொடக்கம் தொடர்ச்சியான போராட்டங்களை கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் விவசாயிகள் முன்னெடுத்திருந்தனர்.தமிழர்களின் நிலங்கள் பறிக்கப்படுவதுடன் தமிழர்களின் பொருளாதாரத்தினையும் இந்த அரசாங்கம் பறிக்கமுனைவதாக

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## முயற்சி செய்தால் முன்னேறலாம், சுயதொழில் முயற்சியாண்மை

# பெண்மணியின் கடந்து வந்த பாதை

**பகுதி 1**

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

“தொழிலை தொடங்கும் போது 10கிலோ கிராம் அரிசி வாங்கினேன் அதை கையால் இடித்து மாவாக்கி விற்பனைக்காக திருகோணமலை உவர் மலைப் பகுதியில் ஒரு ஆசிரியர் மூலமாக அரிசி மாவினை விற்று வந்தேன் அதன் பிறகு விற்பனை அதிகரித்திருந்தது” என திருகோணமலை பாலம் போட்டாறு பத்தினிபுரம் கிராமத்தை சேர்ந்த அரிசி மா உற்பத்தியாளரான விஜயபாரதி தெரிவித்தார்.



விஜயபாரதி எனும் பெண் பின்தங்கிய மீள்குடியேற்ற கிராமத்தில் வாழ்ந்து வரும் இரண்டு பிள்ளைகளின் தாய். இவர் அரிசி மா உற்பத்தி மூலமாக நாளாந்த வருமானத்தை ஈட்டிக் கொள்கிறார்.

பிள்ளைகளில் இரு பெண்களும் பாடசாலை கல்வியை பெற்று வருகின்றனர் தனது கணவர் யுத்த காலத்தில் முதுகெலும்பு பாதிக்கப்பட்டு தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ளார்.

நாட்டில் அப்போது ஏற்பட்ட யுத்தம் காரணமாக அருகாமையில் உள்ள கிண்ணியா எனும் ஊரில் இடம் பெயர்ந்து மூன்று மாத காலமாக பெரும் சிரமத்துக்கு மத்தியில் வாழ்ந்தனர்.

ஆரம்ப காலத்தில் முதலில் கையால் தான் மா இடித்து விற்பனை செய்யப்பட்டதாகவும் பிறகு சந்தைப்படுத்தல் அதிகரிப்பினால் மா அரைக்கும் இயந்திரம் அப்போது 56 ஆயிரம் ரூபா அளவில் கொள்வனவு செய்யப்பட்டது.

“சிறிய கடைகளுக்கு அரிசி மா விற்பனைக்காக கேட்ட போது முதலில் அவர்கள் மாவுக்கான பக்கட்டில் அடைக்கப்பட்டிருந்த போது லேபலை தான் கேட்டார்கள் பிறகு பிரதேச செயலகத்தில் பதிவு செய்தேன் “ என ஆரம்ப கால சுயதொழிலின் முன்னேற்றம் குறித்து மேற்கண்டவாறு கூறினார்.



படிப்படியாக முன்னேற்றம் கண்ட விஜயபாரதி தற்போது மாதத்துக்கு 300கிலோ கிராம் மா அரைத்து சந்தைப்படுத்தலில் ஈடுபட்டு வருகிறார். பக்கட்டில் அடைக்கப்பட்ட நிலையில் “அக்சயா அரிசி மா உற்பத்தி” என லேபல் ஒட்டப்பட்ட உற்பத்தியினை மேற்கொண்டுள்ளார்.

பிரதேச செயலகத்தில் சிறுகைத்தொழில் பிரிவில் தனது உற்பத்தியை பதிவு செய்துள்ளார். ஒவ்வொரு மாதமும் இலாப நட்டம் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்துவார். கணக்கு பேணுதல் தொடர்பில் அறிக்கைகளாக தினமும் தனது நாட் குறிப்பேட்டில் எழுதி இலாபத்தை தேடும் முயற்சியாளரே இவர். தனது சொந்த உழைப்பில் ஒரு குடும்பத்தை வழிநடாத்தும் சக்தி வழிநடத்தும்.

கணவனின் துணையுடன் குடும்பத்தை வெற்றி கண்டவள் வறுமையை போக்கி சந்தோசமான வாழ்வினை வாழ்ந்து கொண்டிருக்கும் இப்படியான பெண் பாராட்டுக்குரியவள்.

“நான் உழைப்பதில் கிடைக்கும் வருமானத்தை எனது பிள்ளைகளின் வங்கி கணக்கில் அவர்களுக்காக மாதா மாதம் 2000 ஆயிரம் ரூபா வைப்பிலிட்டு அவர்களின் எதிர்காலத்துக்காக சேமிக்கிறேன்” என இலாபத்தை தான் அடைந்தது முதல் பொருளாதார நிலவரங்கள் குடும்ப சுமைகள் தொடர்பிலும் பகிர்ந்து கொண்டார்.

இயந்திரம் மூலமான மா அரைக்கும் குறித்த பெண்மணியுடன் இருவர் பணி புரிகின்றனர். தற்காலிகமான சிறிய கட்டடத்தில் வாழ்ந்து வந்தாலும் ஏனைய சிறு தோட்ட உற்பத்தி மூலமும் மற்றும் பனை ஓலை மூலமான உற்பத்தி பொருள் தயாரிப்பிலும் ஈடுபட்டு வருமானம் தேடுகிறார்.



தற்காலிக ஓலை குடிசையில் தான் சமையலறை காணப்படுகிறது சில வேலையில் மழை காலங்களில் சமைக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படுவதுமுண்டு.

தரம் ஐந்து வரை கற்றிருந்தாலும் வரவு செலவு விபரங்களை எழுதி பேணிப் பாதுகாக்கும் திறமையான பெண்மணி. எந்தவிதமான தொழில் நுட்பமின்றியே ஆரம்ப காலமாக தனது தொழிலை ஆரம்பித்து தற்போது இயந்திரம் மூலமான நவீன வகையில் முன்னேற்றம் கண்டு கொண்டாள்.

குடும்பத்துக்கான மாதாந்த செலவாக 30 ஆயிரம் ரூபாவுக்கு மேலாக செலவாகின்றதாகவும் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் செலவு என காணப்படுகிறது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி மூலமாக அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் 30 ஆயிரம் ரூபா வருமானமாக இந்த தொழில் மூலம் கிடைக்கப் பெற்றது. தற்போது இரட்டிப்பாக மாறி அண்ணளவாக 45 ஆயிரம் ரூபா வரை இதன் மூலம் வருமானமாக அப் பெண்மணி இலாபமீட்டுகிறார்.

இவரது கிராமம் பிரதான வீதியில் இருந்து சுமார் 2கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. பஸ் பிரயாணம் மூலமாக சந்தைப்படுத்தலை மேற்கொள்வதற்காக பிரதான வீதிக்கு நடந்தே செல்ல வேண்டும். குறித்த நடை பாதையின் பகுதிகள் உட்பட பிரதான வீதியின் பகுதியின் அருகாமையில் பாரிய குப்பை தொட்டியும் காணப்படுகிறது.

பிரதேச சபை மூலமாக சேரும் கழிவுகள் இங்கு கொட்டப்படுகிறது இதனை தேடி காட்டு யானைகள் படையெடுப்பதும் வழக்கம். “மாலை வேலைகளில் காட்டு யானை ஊருக்குள் வந்து விடும் வியாபாரத்தினை முடித்து விட்டு பஸ் வண்டியை விட்டு இறங்கியதும் வீட்டுக்கு செல்வதிலும் பயம் ஏற்படும் பயந்து பயந்தே செல்ல நேரிடும்” என காட்டு யானைகளின் தொல்லை தனது அச்ச நிலை தொடர்பிலும் உயிரினை துச்சமென மதித்து வாழ்ந்து வருகின்ற நிலை தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

குறித்த பத்தினிபுர கிராமத்தில் காட்டு யானைகள் அடிக்கடி குடியிருப்பு, தோட்ட உற்பத்திகளை துவம்சம் செய்து விட்டு சென்ற நிலையும் ஏற்பட்டுள்ளதுடன் பல உயிர்களையும் இழக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. பாதுகாப்பான யானை வேலிகள் இங்கு உரிய அரச திணைக்களத்தால் அமையப் பெறவில்லை.

எது எப்படியாக இருந்தாலும் மன தைரியம் மூலமாக காட்டு யானை தாக்குதலில் உயிர் தப்பி வாழ்ந்து வருகின்றார். குறித்த பகுதியில் அதிகமான மழை காலம் ஏற்பட்டால் வெள்ளப் பெருக்கு ஏற்படும். இதனால் மா அரைக்க முடியாது அதையும் தாண்டி வீட்டின் நடுவில் கொண்டு தண்ணீர் வடிந்ததும் ஒரு வகையில் ஏதோ சிரமத்துக்கு மத்தியில் உற்பத்தியில் ஈடுபடுகிறார்.

கொரோனா காலங்களில் அரிசி மா விற்பனை குறைவாக இருந்தது . நாடு முடக்கப் பட்ட போது அரச அனுமதிப் பத்திரம் மூலமாக சந்தைப்படுத்தலை மேற்கொண்டு வந்தார். ஒன்றுக்கு மேற்பட்ட முகக் கவசங்களை அணிந்து திறம்பட சிரமம் பாராது உழைப்புக்காக வியர்வை சிந்தினார். இது ஒரு புறமிருக்க விஜயபாரதி மற்றுமொரு தொழிலாக பனை ஓலை மூலமாக கைப்பணி பொருட்களையும் செய்து வருகிறார் இதன் மூலமும் ஓரளவான வருமானம் கிடைக்கப் பெறுகிறது.

பிரதேச செயலகம் ஊடாக அரசாங்கத்தின் மூலம் தோட்ட உற்பத்தியினை மேற்கொள்ள நீர்ப் பம்பி வழங்கி வைக்கப்பட்டது. வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் மா உற்பத்திக்கு மேலாக இந்த உதவியினையும் அப் பெண்மணி பெற்றுக் கொண்டார். கணவனின் வைத்திய செலவு போக்குவரத்து செலவு என காணப்பட்டாலும் தனி ஒருவராக உழைப்பதை கைவிட வில்லை. விடா முயற்சியின் பலனாக “அக்சயா மா உற்பத்தி” என்றாலே தரமானதொன்றாக கடைகளில் பார்க்கப்படுகிறது.

ஆரம்ப காலத்தில் பல கஷ்டங்களை அனுபவித்த போதும் தினக்கூலித் தொழிலாக செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தன. ஆனால் அதையும் தாண்டி சுயதொழில் உற்பத்தி தனக்கு சந்தோசமளிப்பதாக பெண் தெரிவித்தார். விஜயபாரதி பதிவு செய்யப்பட்ட மகளிர் அபிவிருத்தி சங்கத்தில் உறுப்பினராகவும் செயற்படுகிறார்.

தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இடம் பெறும் சிறு கைத் தொழில் உற்பத்தி விற்பனை கூடம் ஊடாக தனது உற்பத்தி பொருட்களான அரசி மா, அலங்கார கைப்பணி பொருட்களையும் சந்தைப்படுத்துவார்.

குறித்த பொருட்களுக்கான அதிக சந்தை வாய்ப்பு திருகோணமலை மாவட்டத்தில் காணப்படுகிறது.

உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு காரணமாக இவருக்கான சந்தை வாய்ப்பு கிடைக்கப் பெறுகின்றது.

“பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக மேலதிகமாக சிறு தோட்ட உற்பத்தியிலும் ஈடுபட்டு வருவதுடன் இதன் மூலமான

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# விதையும் விருட்சமும்

துரைசாமி நடராஜா

இந்திய வம்சாவளி மக்களுக்கு இவ்வருடம் மிகவும் முக்கியத்துவம் மிக்க வருடமாக அமைந்தது. இம்மக்கள் இலங்கைக்கு வருகை தந்து இவ்வருடத்துடன் 200 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளதே முக்கியத்துவத்திற்கான காரணமாகும். இப்பூர்த்தியினை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நினைவுகூறல் நிகழ்வுகள் இன்னும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் மலையக மக்களின் அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு வாக்குறுதிகளை ஆட்சியாளர்களும், எதிர்க்கட்சியினரும் வழங்கி வருகின்றனர். எனினும் இவ்வாக்குறுதிகளின் நம்பகத்தன்மையை பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.



தமிழக வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவிற்கு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலட்சோபலட்சம் தமிழ் தொழிலாளர்கள் தமிழகத்திற்கு மிக அண்மையிலுள்ள இலங்கையில் மட்டுமன்றி பல தொலை தூரத்தில் உள்ள நாடுகள் மற்றும் தீவுகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். அவற்றுள் நேவீஸ், அன்ரீல்ஸ், நியூ கலிடோனியா, கிரனிடா, பிஜி, டெமாரா, மொரீசியஸ், தென் ஆபிரிக்கா, அந்தமான், சுமாத்திரா, ஜமெய்க்கா போன்ற பல இடங்கள் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இவ்வாறு நாடுகள் பலவற்றிற்கும், தீவுகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்ட இந்திய வம்சாவளி தமிழ்த் தொழிலாளர்கள் அரசியல், பொருளாதார சமூக ரீதியாக அடக்கி ஒடுக்கப்பட்டு பிரித்தானிய பிரான்சிய ஆட்சியாளர்களாலும் மற்றும் உள்நாட்டினராலும் மோசமான சுரண்டல்களுக்கு உள்ளான வரலாறு மிகவும் கொடுமையானதாகும்.

இந்த வகையில் இலங்கையின் மலையகப் பகுதிகளில் குடியேறிய அல்லது குடியேறப்பட்ட இந்திய வம்சாவளி தமிழ் தொழிலாளர்கள் ஆரம்பகாலம் முதலே பல்வேறு இன்னல்களையும் அனுபவிக்க நேர்ந்தமை புதிய விடயமல்ல. இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட சந்தர்ப்பத்திலேயே பல தொழிலாளர்கள் உணவின்மை, நோய் உள்ளிட்ட பல காரணங்களால் உயிரிழக்க நேர்ந்தது.

இலங்கைக்கு வந்தபின்னரும் கூட அவர்



கள் உரிய சுகாதார மற்றும் மருத்துவ வசதிகள் இல்லாத நிலையில் உயிரிழப்புக்களை சந்தித்தனர். எது எவ்வாறானபோதும் இம்மக்களை கசக்கிப் பிழிந்து அவர்களின் உழைப்பை உச்சகட்டத்தில் உறிஞ்சுவதையே நிர்வாகத்தினர் குறியாகக் கொண்டிருந்தனர். இம்மக்களின் கல்வி உரிமைகள் மறுக்கப்பட்டன.

"தமது சொந்த நாட்டிலேயே மிகவும் இழிவான நிலையில் பிறந்து வளர்ந்த தமிழ்க் கூலிக்கு எதனையும் விளங்கிக் கொள்ளக் கூடிய உள ஆற்றல் இல்லை. எனவே அவனை மிஷனரிமாருக்கு பயனுள்ள வகையில் உருவாக்கிக் கொள்ள ஏதாவது கொஞ்சம் சொல்லித் தந்தால் அதுவே போதுமானது. கொஞ்சம் கூடக் குறைய கல்வியை இவர்களுக்கு வழங்கி விட்டால் அது இவர்களை தோட்டத் தொழிலுக்கு மட்டுமல்ல வேறு எதற்குமே லாயக்கற்றவர்களாக்கிவிடும். கல்வி என்பது அவர்களுக்கு பரிச்சயமில்லாத ஆடம்பரப் பொருள்" என்று கடந்தகால அறிக்கையொன்று வலியுறுத்துகின்றது.

இதேவேளை தொழிலாளர்கள் தங்களது உரிமைகளை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் தொழிற்சங்கங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கும் நிர்வாகத்தினர் இடமளிக்கவில்லை. நகர்ப்புறங்களில் தொழிற்சங்கக் கூட்டங்கள் இடம் பெறுகின்றபோது தொழிலாளர்களை அக் கூட்டங்களுக்கு செல்லவிடாது நிர்வாகத்தினர் தடுத்து நிறுத்திய சந்தர்ப்பங்களும் அதிகமாகும். தோட்டங்களுக்குள் தொழிற்சங்கங்கள் உள் நுழைந்தால் அது தமது பணிகளுக்கு இடையூறாகும்.

தொழிலாளர்களின் உரிமைகளுக்கு தொழிற்சங்கவாதிகள் குரல் கொடுக்கின்றபோது தம்மால் நிர்வாகத்தை கொண்டு நடத்த முடியாது போகும் என்று தோட்ட நிர்வாகத்தினர் அஞ்சினர். எனினும் கோ. நடேசையர் போன்றவர்களின் கடுமையான முயற்சியின் விளைவாக தோட்டங்களில் தொழிற்சங்க கலாசாரத்திற்கு வலுசேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

### பிரதிநிதித்துவம் குறைவு

இவ்வாறாக பல்வேறு அடக்கு முறைகளுக்கும் உள்ளாகி இருந்த இந்திய வம்சாவளி மக்கள் இன்றும் கூட அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கின்றனர். குடியிருப்பு, தொழில் வாய்ப்பு, சமூக நிலைமைகள் என்றெல்லாம் பல துறைகளையும் நோக்குகின்றபோது நிலைமைகள் திருப்தியானதாக இல்லை. இம்மக்களின் சனத்தொகை இலங்கையில் சுமார் 16 இலட்சமாக காணப்படுகின்ற நிலையில் இச்சனத்தொகைக்கேற்ப அரசியல் பிரதிநிதித்துவமும் இல்லாதுள்ளமை நோக்கத்தக்கதாகும்.



இந்நிலையில் பாராளுமன்றத்திலும், மாகாண சபைகளிலும், உள்ளூராட்சி மன்றங்களிலும் இச்சமூகம்சார் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. இனவாத சிந்தனையாளர்கள் இம்மக்களுக்கு கிடைக்கும் சொற்ப உதவிகளைக் கூட தட்டிப்பறிப்பதில் குறியாக உள்ளனர். அள்ளிக் கொடுக்கப்படாத போதும் இம்மக்களுக்கு கிள்ளியும் யாரும் கொடுத்துவிடக் கூடாது என்பதே இனவாதிகளின் நோக்கமாகும்.

இத்தனை சிரமங்களுக்கும் மத்தியில் இந்திய வம்சாவளி மக்கள் இலங்கைக்கு வருகைதந்து 200 வருட பூர்த்தியை இந்த ஆண்டில் நினைவுகூறும் நிகழ்வுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

வேதனையும், சோதனையும் நிறைந்த இம்மக்களின் துன்பத் தொடர்கதை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்ற நிலையில் இந்த 200 வருட பூர்த்தி எந்தளவுக்கு ஆறுதல் அளிக்கப்போகின்றது என்று தெரியவில்லை. இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருட பூர்த்தியை முன்னிட்டு நாட்டின் பல பகுதிகளிலும் நினைவுகூறல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதில் இம்மக்களின் அபிவிருத்தி நிலைமைகள்,சாதனைகள், தேவைப்பாடுகள் என்று பல்வேறு விடயங்கள் குறித்தும் கருத்து முன்மொழிவுகள் இடம்பெற்று வருகின்றன. இவற்றுடன் இம்மக்களின் அபிவிருத்தி தொடர்பில் ஆட்சியாளர்கள், எதிர்கட்சிகள், நலன்விரும்பிகள் எனப்பலரும் பல்வேறு வாக்குறுதிகளையும் வழங்கி வருகின்றனர். எனினும் இந்த வாக்குறுதிகள் எந்தளவுக்கு சாதக விளைவுகளைஏற்படுத்தப்போகின்றனஎன்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

இந்திய வம்சாவளி மக்களின் 200 வருட பூர்த்தியை நினைவுகூறும் பிரதான இரு வைபவங்கள் இவ்வருடத்தில் இடம்பெற்றன. இவை குறித்து நாம் எமது அவதானத்தை செலுத்த வேண்டிய தேவையுள்ளது. இதனடிப்படையில் நாம் 200 நிகழ்வு கடந்த நவம்பர் மாதத்தில் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட பலரும் பங்கு கொண்டிருந்தனர். சிறப்பு அழைப்பாளராக இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து சிறப்பித்தார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருந்தோட்டத் துறையில் புரட்சிமிக்க மாற்றங்களை ஏற்படுத்தப் போவதாக தெரிவித்திருந்தார். 'நாம் 200 தேசிய நிகழ்வு மலையக மக்கள் 'இலங்கையர்' என்ற அடையாளத்துடன் முன்னோக்கி பயணிப்பதற்கான ஆரம்பமாகும்.

மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்கான தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்கு பிரதமர் தலைமையில் குழுவொன்று அமைக்கப்படும். அத்தோடு மலையக மக்களுக்கு உறுதிப்பத்திரத்துடன் கூடிய 10 பேர்ச்சஸ் காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மலையக மக்கள் தமது காணிகளில் தேயிலையை பயிரிட்டு அவற்றை தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கும் வகையில் பெருந்தோட்டத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

பெருந்தோட்ட பயிர்ச்செய்கையில் புதிய முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படும். அதன்படி அங்கு வாழும் மக்கள் காணிகளை வாங்கி அதில் தேயிலையை பயிரிட்டு அவற்றை தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கும் வகையிலான மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். பெருந்தோட்டக் கம்பனிகள் இந்த முன்னுதாரணமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பங்களிப்பு செய்ய வேண்டும்' என்று ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தி இருந்தார்.

இதேவேளை பல தசாப்தங்களாக பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மலையக மக்கள் இந்தியாவுடனான உறவுகளை தொடர்ந்தும் பேணி வந்துள்ளனர். அவர்கள் இரு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்



# போரினால் முதன்மைப் பாதிப்புக்கு உள்ளாகுபவர்கள் சிறுவர்களே

தமிழில்: ஜெயந்திரன்

## பகுதி 2

**சிறுவர் பாதுகாப்பு அமைப்புகள் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள்**

போரால் பாதிக்கப்படும் சிறுவர்களின் நலன்களுக்காக உரத்துக் குரல் கொடுப்பதில் சிறுவர் பாதுகாப்பு அமைப்புகள் மிகக் காத்திரமான பங்கு வகிக்கின்றன. உளவளத் துணை உதவிகள், அவசரகால உதவி, பாதுகாப்பு உதவிகள் போன்ற இன்னோரன்ன பணிகளை இந்தச் சிறுவர் பாதுகாப்பு அமைப்புகள் உலகெங்கும் ஆற்றிவருகின்றன. இவற்றுக்கு மேலாக, சிறுவர் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல், அரசுகள் மற்றும் பன்னாட்டு அமைப்புகள் சிறுவர் உரிமைகளுக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடிய வகையில் அவற்றின் மேல் அழுத்தத்தைப் பிரயோகித்தல் மற்றும் அவ்வாறான அமைப்புகளின் கொள்கை உருவாக்கம் திட்டச்செயற்பாடுகளில் தாக்கத்தைச் செலுத்தக்கூடிய விதத்தில் ஆய்வுகளை மேற்கொள்ளல் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் இவ்வாறான சிறுவர் பாதுகாப்பு அமைப்புகள் ஈடுபடுகின்றன.

உட்கட்டமைப்புகள் சிதைக்கப்படுதல், வன்முறைகள் முடிவற்றுத் தொடர்தல் போன்ற காரணங்களால், போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு போதிய உதவியை வழங்குவதில் மனிதாய நிறுவனங்கள் பல்வேறு இடர்ப்பாடுகளைச் சந்திக்கின்றன. இவ்வாறான சூழ்நிலைகளின் காரணமாக, போதிய மருத்துவ உதவிகள் சிறுவருக்குக் கிடைக்காமல் போவதன் காரணத்தினால், நோய் மற்றும் தவிர்க்கப்படக்கூடிய சாவுகள் போன்றவற்றால் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது. தரமான குடிநீரைப் பெறுவதிலும் ஏனைய சுகாதாரச் சேவைகளைப் பெறுவதிலும் உள்ள சிரமங்கள், நீரால் பரவும் நோய்கள் அதிகரிக்கும் சாத்தியப்பாட்டைத் தோற்றுவித்து, அவர்களது ஆரோக்கியத்தையும் நலனையும் மேலும் கேள்விக்குரியதாக மாற்றுகின்றன.

**ஐக்கிய நாடுகளின் முயற்சிகளும் அது சந்திக்கும் தோல்விகளும்**

தனது பல்வேறு கிளை நிறுவனங்கள், பொறிமுறைகள் ஊடாக, போரால் பாதிப்புகளுக்கு உள்ளாகின்ற சிறுவர்களைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் நடவடிக்கை எடுத்துவருகிறது. 1989 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சிறுவர் உரிமைகள் சாசனம், சிறுவர்களின் உரிமைகளை வரையறை செய்வதுடன், எல்லாச்சூழல்களிலும் அவ்வாறான உரிமைகள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது. சிறுவர் பாதுகாப்பு ஆணைகள் பலவற்றைத் தாபிப்பதுடன், அமைதியைப் பேணும் செயற்பாடுகளில் இந்தச் சாசனத்தை உள்வாங்குவதன் ஊடாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையும் சிறுவர் பாதுகாப்பு விடயங்களைக் கையில் எடுத்து வருகின்றது.

இவை எவ்வாறிருப்பினும், ஐக்கிய நாடுகளின் முயற்சிகள் எல்லாநேரங்களிலும் வெற்றியைத் தரும் என்று சொல்லமுடியாது. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையைக் கொண்டிருக்கும் நாடுகளின் வீட்டோ அதிகாரம், ஐக்கிய நாடுகள் தனது பணியைச் செவ்வனே செய்வதற்குத் தடையாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக, சிரியப் போரை எடுத்துக்கொண்டால், ரஷ்யாவும் சீனாவும் தங்களது வீட்டோ அதிகாரத்தைத் தொடர்ந்து பிரயோகிப்பதன் காரணத்தால். சிறுவர்களுக்கு எதிராகப் பாரிய குற்றங்களை இழைத்தவர்களைத் தண்டிப்பது இயலாமல் இருக்கிறது. இக்காரணத்தால் அங்கு சிறுவர்களின் துன்பங்கள் முடிவற்றுத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

**போர்ச்சூழலில் அகப்பட்டுள்ள சிறுவரைப் பாதுகாப்பதில் பன்னாட்டுச் சமூகத்துக்குரிய கடப்பாடு**

போர் நடைபெறும் பிரதேசங்களில் உள்ள சிறுவர்களைப் பாதுகாப்பது, பன்னாட்டுச் சமூகத்தின் தலையாய கடமைகளில் ஒன்றாகும். அப்பாவிப் பொதுமக்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளாதிருத்தல், சிறுவரை இலக்கு வைக்காதிருத்தல் போன்ற பன்னாட்டு மனிதாயச் சட்டங்களை, போரில் ஈடுபடுவோர் மதித்து நடக்கவேண்டும். சிறுவர்தொடர்பானபன்னாட்டுச் சாசனங்களை நாடுகள் அங்கீகரிப்பதுடன், சிறுவர் உரிமைச் சாசனம் மற்றும் அதனுடன் இணைந்த விதிமுறைகள் போன்றவற்றை தமது நாட்டுச்சட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்குள் உள்வாங்க வேண்டும்.



பன்னாட்டு அமைப்புகளின் உதவிகளைப் பெற்று, தேசிய அரசுகள், போரால் பாதிக்கப்படும் பிரதேசங்களில், சிறுவர்களைப் பாதுகாக்கும் பொறிமுறைகளைக் கட்டமைக்க வேண்டும். சிறுவருக்கு ஏற்றவிதத்தில் வடிவமைக்கப்பட்ட முறைமீட்டு வழிவகைகள், சிறுவருக்கான பாதுகாப்பிடங்கள், சிறுவருக்கு உளவள உதவி வழங்குவதற்குப் பயிற்றப்பட்டவர்கள் போன்ற வசதிகளை இவ்வாறான பொறிமுறைகள் உள்ளடக்கியிருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பிள்ளைகள், தமது கல்விச் செயற்பாடுகளைத் தொடரக்கூடிய வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும். பயிற்றப்பட்ட ஆசிரியர்களைக் கொண்டு, கற்றல் செயற்பாடுகளுக்கான தற்காலிக இடவசதிகள் இவ்வாறான சிறுவருக்குச் செய்துகொடுக்கப்பட வேண்டும். மனிதாய அமைப்புகள், சிறுவருக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் தேவையான உதவிகளை தங்குதடையின்றி வழங்கக்கூடிய வகையில் போரில் ஈடுபடும் தரப்புகள் வழிவகை செய்துகொடுக்க வேண்டும்.

சிறுவர்போராளிகளது ஆயுதங்கள்களையப்பட்டு, அவர்கள் இயல்பு வாழ்க்கை வாழும் வழிவகைகள் செய்துகொடுக்கப்பட வேண்டும். அவ்வாறான சிறுவருக்கான உளவள உதவிகள், கல்வி, தொழிற்பயிற்சிகள், மற்றும் சமூகத்தோடு இணைந்து வாழ்வதற்குத் தேவையான வசதிகள் என்பன வழங்கப்பட வேண்டும். போரில் சிறுவருக்கு எதிராக பாரிய குற்றங்களை இழைத்தவர்கள், பன்னாட்டு நீதியியல் நீதிமன்றம், பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் போன்ற கட்டமைப்புகள் ஊடாகப் பொறுப்புக்கூறும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

மேலதிகமாக, சிறுவர்களின் பிரச்சினைகள் நெருக்கடியான நிலையை அடைவதற்கு முன்னர், முன்கூட்டியே இனங்காணக்கூடிய வகையில் சாதாரண மக்கள் நடுவில், தேவையான கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான அழுத்தம் பிரயோகிக்கப்பட வேண்டும். போரின் உடனடி விளைவுகள், போர் ஏற்படுவதற்கான அடிப்படைக்காரணங்கள் போன்றவை இனங்காணப்பட்டு, நீண்டகால அமைதிச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். மனித உரிமை மீறல்கள், மற்றும் சிறுவர் மீது இழைக்கப்பட்ட ஏனைய கொடுமைகளுக்கான நிலைமாறுகால நீதிச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு, போரைச் சந்தித்த சமூகங்களில் நல்லிணக்கமும் குணமாக்குதலும் மேற்கொள்ளப்படவேண்டும்.

**போர்க்காலங்களில் ஒத்துணர்வையும் அமைதியையும் பேணுதல்**

தொடர்ந்து நீண்டகாலம் நடைபெறும் போர்களும் சிறுவர்களில் அவ்வாறான போர்கள் ஏற்படுத்தும் தாக்கங்களும் கடுஞ்சினம், பழிவாங்கும் தன்மைகள், நம்பிக்கையீனம் போன்றவற்றுக்குத் தூபம் போடுகின்றன. வன்முறை மற்றும் விரோத உணர்வுகளின் நடுவில் வளர்கின்ற சிறுவர்கள் நடுவில் ஒத்துணர்வு மற்றும் முரண்பாடுகளை அமைதி வழியில் தீர்த்தல் போன்ற ஆற்றல்களின் வளர்ச்சி அவர்களில் தடைப்படுகின்றது. வன்முறைகளை அனுபவிக்கும் அல்லது அவற்றை நேரில் பார்க்கும் சிறுவர்கள், தீவிரவாதிகளாகப் பின்னர் மாற்றமடைந்து, வன்முறைச் சக்கரம் எதிர்காலச் சந்ததிகள் நடுவில் தொடரக்கூடிய ஆபத்தைத் தோற்றுவிக்கின்றது.

போரின் பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்பட்ட சிறுவர்கள் சந்தித்த உளநெருக்கீடுகளிலிருந்து அச்சிறுவர்கள் விடுபடுவதற்குத் தேவையான உதவிகளும் அவர்களது உணர்வுகளை அவர்கள் உரியமுறையில் கையாளுவதற்குத் தேவையான உதவிகளும் அவ்வாறான சிறுவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மீளக் கட்டியெழுப்பப்படவேண்டும். குடிநீர், சுகாதார வசதிகள், கல்வி வசதிகள், சுகாதார உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற வசதிகள்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# போரும், பொருளாதார அழிவுமாக கடந்து செல்லும் 2023

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

கடந்த 2022ஆம் ஆண்டு ஆரம்பித்த உக்ரைன் போர் உலகின் பொருளாதாரத்திலும், பூகோள அரசியலிலும் மீளமுடியாத மாற்றங்களை ஏற்படுத்தியவாறு சென்றுகொண்டிருக்கின்றது. கடந்த 22 மாதங்களாக அந்த போர் பல பரிமாணங்களின் ஊடாக நகர்கின்ற அதேசமயம், இந்த வருடத்தின் இறுதிப்பகுதியில் ஆரம்பமாகிய பாலஸ்தீன - இஸ்ரேல் போர் மிகவும் மோசமான இழப்புக்களுடன் தொடர்கின்றது.

கடந்த இரண்டு வருடப்போரில் உக்ரைனில் ஏறத்தாழ 10000 மக்கள் கொல்லப்பட்டபோதும், கடந்த 3 மாதப்போரில் காசாவில் 22,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், அதில் 60 விகித மானவர்கள் குழந்தைகளும், பெண்களும் ஆகும். அதாவது கடந்த ஆண்டு உலகில் மோசமான ஆண்டாகவே பார்க்கப்படுகின்றது.



இரண்டு போர்களிலும் மேற்குலக நாடுகளும் அது சார்ந்த அனைத்துலக அமைப்புக்களும் கடைப்பிடித்த விதி முறைகள், மற்றும் அனைத்துலக குறிப்பாக மேற்குலக ஊடகங்கள் இரு போர்களையும் அணுகிய விதம் என்பன இந்த வருடத்தில் பல போலியான விம்பங்களை உலகின் முன் தெளிவாக்கியுள்ளது.

நாடுகளுக்கு இடையிலான பேரழிவுமிக்க போர்களை தடுப்பதற்கு என இரண்டாவது உலகப்போருக்கு பின்னர் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையானது உலகில் உள்ள மக்களை காப்பதற்கான அமைப்பு அல்ல என்பதை 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் போதும், தற்போது இடம்பெற்றுவரும் காசா போரின் போதும் உறுதிப்படுத்தியுள்ளது.

எனவே தான் ஐ.நாவுக்கு இணையான மாற்று அமைப்பு ஒன்று மேற்குலகம் சாராத அமைப்பாக உருவாகவேண்டும் என்ற கோரிக்கைகள் இந்த ஆண்டில் வலுப்பெற்றுள்ளன.

மேலும் பொருளாதார ரீதியாகவும் மேற்குலகம் மிகப்பெரும் பின்னடைவை சந்தித்த ஆண்டாக 2023 நகர்ந்துள்ளது. அடுத்த வருடத்தின் உலகின் பொருளாதார வளர்ச்சி என்பது அமெரிக்காவின் வட்டி விகிதம், எண்ணெய் விலை, சீனாவின் பொருளாதாரம் ஆகியவற்றில் தான் தங்கியிருக்கப்போகின்றது என்ற எதிர்வுகூறல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.


Bloomberg @SMOTRI_MEDIA

Live Now | Markets | Economics | Industries | Tech | AI | Politics | Wealth | Pursuits | Opinion | Businessweek

Markets

Europe Gas Futures Surge on Risk of Widening War in Middle East

- Benchmark contracts jump amid new attacks in the Red Sea
- Oil also gains as some traders return from Christmas break

By Elena Mazneva
27 декабря 2023 г. at 10:58 GMT+3

Save | Listen 1:59

European natural gas futures jumped amid an escalation of the war

உக்ரைன் போரை தொடர்ந்து ரஸ்யா மீது மேற்குலக நாடுகள் கொண்டுவந்த பொருளாதார தடைகள், பாரிய தாக்கங்களை ரஸ்யாவில் ஏற்படுத்தவில்லை என்பது மட்டுமல்லாது அது மேற்குலக நாடுகளை அதிகம் பாதித்துள்ளது. அதன் தாக்கங்களை இந்த வருடத்தில் அதிகம் காணக்கூடியதக இருந்தது. உலகின் எண்ணெய் வர்த்தகத்தில் 20 விகிதமானவை இந்த ஆண்டு அமெரிக்க டொலர் அல்லாத நாணயங்களில் தான் நிகழ்ந்துள்ளதாக த வோல் ஸ்ரீற் ஜேர்னல் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் உக்ரைன் மேற்கொண்ட ஊடறுப்பு தாக்குதல் தோல்வியில் முடிந்ததுடன், இரண்டுவருடப் போரில் அது ஏறத்தாழ 4 இலட்சம் படையினரையும் இழந்துள்ளது. அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏயின் முன்னாள் ஆய்வாளர் லாறி ஜோன்சன் அதனை தெரிவித்துள்ளார். நேட்டோ வழங்கிய 130 பில்லியன் டொலர்கள் ஆயுத உதவிகளும் பலன் தரவில்லை என்பதுடன், உக்ரைனின் தோல்வி நேட்டோவின் வீழ்ச்சியாக பார்க்கப்படும் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

அதேசமயம், போரினால் வீழ்ந்த இஸ்ரேலின் பொருளாதாரத்தை கட்டியமைக்க அமெரிக்கா அதிக நிதி உதவிகளை வழங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இது உக்ரைனுக்கான நிதி உதவிகளை அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் குறைக்க வேண்டிய நிலையை தோற்றுவித்துள்ளது. மறுவளமாக உக்ரைன் போர் காரணமாக ஐரோப்பாவின் பொருளாதாரம் கடும் வீழ்ச்சி கண்டுள்ளது. ஜேர்மனின் பொருளாதாரம் இந்த ஆண்டு மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் உக்ரைனுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கவிருந்த 50 பில்லியன் டொலர்கள் நிதி உதவியை ஹங்கேரி நிறுத்தியுள்ளதும் மிகப்பெரும் பின்னடைவாகவே பார்க்கப்படுகின்றது.

மத்தியகிழக்கில் இந்த வருடத்தில் ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது மேற்கொண்ட தாக்குதல் என்பது உலக வரலாற்றில் மிகவும் சிறப்பாக திட்டமிட்டு நடத்தப்பட்ட ஊடறுப்பு தாக்குதல் என படைத்துறை ஆய்வாளர்களால் கருதப்படுகின்றது. இந்த தாக்குதலில் 1200 பேர் கொல்லப்பட்டுள்ளபோதும் அவர்களில் 315 பேர் இஸ்ரேலின் மிகச்சிறந்த பயிற்சிபெற்ற படையினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



அதன் பின்னர் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல்களில் இதுவரையில் வடக்கு மற்றும் தெற்கு காசா பகுதிகள் மிக மோசமான அழிவுகளை சந்தித்துள்ளன. எனினும் ஹமாஸினால் கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்ட பிணைக்கைதிகளை 80 நாட்களாகியும் இஸ்ரேலினால் மீட்க முடிய வில்லை.

ஒரு தொகுதி கைதிகளை இரு தரப்பினரும் பரிமாறிக்கொண்டாலும், மீதமுள்ள கைதிகளின் பரிமாற்றம் தொடர்பில் இஸ்ரேலின் கோரிக்கைகளை ஹமாஸ் நிராகரித்தது என்பது ஹமாசின் படைத்துறை பலம் வீழ்ச்சியடையவில்லை என்பதை காட்டுவதாக த நியூயோர்க் ரைம்ஸ் நாளேடு தெரிவித்துள்ளது.

அது மட்டுமல்லாது உலகத்தலைவர்களுடன் ஒப்பிடும்போது வெளிவிவாகாரக் கொள்கைகளை வகுப்பதில் உக்ரைன் அதிபர் இந்த வருடம் தோல்வியடைந்துள்ளதாக த ஸ்ரேற்கிராப் ஊடகம் தனது ஆய்வில் தெரிவித்துள்ளது. அதாவது உக்ரைன் முற்றாக தனிமைப்படுத்தப்பட்ட ஆண்டாக இந்த ஆண்டு உள்ளதாகவும், தனது நலன் கருதி அமெரிக்கா அதன் கவனத்தை வேறுபக்கம் திருப்புவது ஒன்றும் புதிது அல்ல என அது மேலும் தெரிவித்துள்ளது.

மேலும் பாலஸ்தீன - இஸ்ரேல் போரை தொடர்ந்து மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள உறுதியற்றதன்மை அந்த பிராந்தியத்தில் ஒரு போரை ஏற்படுத்தும் சூழ்நிலைகளை மெல்ல மெல்ல ஏற்படுத்தி வருகின்றது. ஏமன் ஹதீஸ் படையினரின் இடைவிடாத தாக்குதல் செங்கடல் பகுதி ஊடான கப்பல் போக்குவரத்தை அது கடுமையான பாதித்துள்ளது.



ஏற்கனவே மிகப்பெரிய 6 கப்பல் நிறுவனங்கள் செங்கடலின் ஊடான போக்குவரத்தை தாம் நிறுத்துவதாக அறிவித்துள்ள நிலையில் கப்பல் போக்குவரத்து வர்த்தகம் 80 பில்லியன் டொலர்களை இழந்துள்ளது. இந்த நிலையில் பல ஆயிரம் கடல் மைல்கள் சுற்றிச் செல்லும் பயணத்தை தவிர்த்து தமது இழப்புக்களை தவிர்ப்பதற்காக பல கப்பல் நிறுவனங்கள் தாங்களுக்கும் இஸ்ரேலுக்கும் எந்த தொடர்புகளும் இல்லை என செங்கடலினுள் நுழையும் போது ஏமனுக்கு அறிப்பது என்ற உடன்பாட்டுக்கு வந்துள்ளன. அதாவது 20 நாடுகளைக் கொண்ட அமெரிக்கா தலைமையிலான கடற்படை கூட்டணியினால் வர்த்தக கப்பல்களை பாதுகாக்க முடியாத நிலை ஒன்று ஏற்பட்டுள்ளதையே இது காட்டுகின்றது.



இதனிடையே, அடுத்த வருடம் ரஸ்யாவுடனான ஒரு போருக்கு தயாராக இருக்குமாறு நெதர்லாந்தின் இராணுவத்தளபதி லெப். ஜெனரல் மாட்டின் விஜ்னேன் தனது படையினருக்கு உத்தரவுகளை வழங்கியுள்ளார்.

ஆனால் மிகப்பெரும் போருக்கு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

**இமாலயப் ... தொடர்ச்சி ...**

சுயநிர்ணய உரிமையைக் கைவிடுதல், இன அழிப்பை சர்வதேச விசாரணைக்கு உள்ளாக்க வேண்டும் என்ற கோரிக்கையை நழுவவிடுதல், இலங்கையர் என்ற அடையாளத்தை ஒப்புக் கொள்ளுதல் என்ற பிரதான நோக்கங்களை சுமந்திரன், சுரேன் சுரேந்திரன் ஆகிய சிலரைத் தவிர ஏனையோர் ஏற்க மறுத்திருந்தனர்.

இதன் காரணமாக இத் தன்னார்வ நிறுவனங்களின் இத்தகைய செயற்பாடுகள் பிசுபிசுத்துப் போயிருந்தன.

2009 இற்கு முன்னர் அல்லது 2009 இல் உருவாகி உலகம் முழுவதிலும் மக்கள் ஆதரவோடு செயற்பட்டு வந்த பதினான்கு புலம்பெயர் அமைப்புகளை இணைத்து கூட்டாக உலகத் தமிழர் பேரவை 2009 இல் உருவாக்கப்பட்டது.

அந்தக் கூட்டின் முதல் தலைவராக இலங்கையில் கடந்த காலத்தில் ஒலிம்பிக் வீரராக புகழ்பெற்று பின்னர் அமெரிக்காவில் வதிந்துவரும் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் என்பவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இவரின் நண்பர்கள் பலரும் இவரை 'எதிர்' என்று அழைப்பர்.

இவர் ரவி குமாருடைய நெருங்கிய நண்பராகவும் பல காலத் தொடர்புடையவர் என்று இவர்கள் இருவரையும் நன்கு அறிந்த பிரித்தானிய வட்டாரங்கள் கூறுகின்றன.

2010 இல் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியபோது தமிழர்கள் சார்பான பொது வேட்பாளராக எதிரைப் போட்டியிடுமாறு அமெரிக்கத் தரப்புகள் அறிவுரை வழங்கியிருந்தன. இது அப்போதிருந்த உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பின் அங்கத்துவ அமைப்புகள் பலவற்றுக்கும் கேள்வியை எழுப்பியது.

இலங்கையின் கட்சி அரசியலுக்குள் செல்லுமாறு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சி உள்ளிட்ட தமிழர் தரப்புக் கட்சிகளை எதிர்வீரசிங்கம் நாடியிருந்தார். ஆனால் கஜேந் திரகுமார் போன்றோர் அதை நுட்பமாக மறுத்து விட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வைப்பதன் மூலம் இலங்கையர் என்ற அடையாளத்துக்குள் ஈழத்தமிழர்களைத் தள்ளி விட்டு நல்லிணக்க அரசியலைத் தனது நலன்களுக்கு ஏற்றவாறு முன்னெடுக்கலாம் என்ற ஒரு எதிர்பார்ப்புடன் அமெரிக்கத் தரப்பு எதிருக்கு இதை அறிவுறுத்தியிருந்ததாக தகவல் அறிந்த வட்டாரஙகள கூர்மைக்குத் தெரிவித்தன.

இந்த நிலையில் எதிரை உலகத் தமிழர் பேரவையில் இருந்து ஓய்வு பெறுமாறு புலம் பெயர் அமைப்புகளால் வலியுறுத்தப்பட்டதால் அவர் நாகரிகமாக ஒதுங்கிக்கொண்டதாகவும் தகவல்.

இப்படிப் பல முயற்சிகள் தோல்வியடைந்த பின்னணியிலேதான் 2013 இல் முன்னாள் அமைச்சர் அமரர் மங்கள சமரவீரவை மையப்படுத்தி சிங்கப்பூரில் நடத்தப்பட்ட மாநாட்டில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

இந்த மாநாட்டில் சுமந்திரன், சுரேன் சுரேந்திரன் மற்றும் கொழும்பில் இருந்து நிமல்கா பெர்ணாண்டோ போன்ற சிங்கள மிதவாதிகள், உள்ளிட்ட பலர் பங்குபற்றியிருந்தனர்.

இலங்கையர் என்ற அடையாளத்துடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதை மைய மாகக் கொண்ட சிங்கப்பூர் தீர்மானங்கள் ஏறத்தாழ இரண்டுவருடங்களாக இரகசியமாகப் பேணப் பட்டன.

இருந்தபோதும் 2015 இல் இவை மெது வாகக் கசிய ஆரம்பித்தன.

காலப் போக்கில் சிங்கப்பூர் தீர்மானமும் பிசுபிசுத்துப் போகவே சுரேன் சுரேந்திரன் உள்ளிட் டவர்கள் தமிழ்த் தரப்பின் வெறுப்புக்கு மேலும் உள்ளானார்கள்.

இதையெல்லாம் அறிந்து கொண்ட தன்னார்வ நிறுவனங்கள் தமது திட்டங்களை மீளாய்வு செய்து மேலும் இரகசியமாக செயற்பட்டனர். அந்த முயற்சியின் தற்போதைய வெளிப்பாடுதான் இமாலய பிரகடனம்.

ஒருபுறத்தில் உலகத் தமிழர் பேரவை எனும் தனிநபர்க்குழுவின் நகர்வுகள் மேற்கு நாடுகளில் இருக்கின்ற தன்னார்வ நிறுவனங்களையும் தென்னாபிரிக்காவையும் மையப்படுத்தி செயற் படும்போது, மறுபுறத்தில் பிரித்தானிய தமிழர் பேரவையானது பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இந்திய ஆளும் தரப்பான பா.ஜ.கா வையும் நோக்கிச் செயற்படுகின்றது.

அதுமட்டுமல்ல, பிரித்தானியத் தமிழர் பேரவை பிரிக்க முடியாத இலங்கை தான் தீர்வு என்று வெளிப்படையாகச் சொல்லத் தயங்கும். ஆனால் உலகத் தமிழர் பேரவை அவ்வாறு வெளிப்படையாகவும் கூறத் தயாராக இருக்கும்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஈழத்தமிழர் தொடர்பான விவாதத்தை ஏற்படுத்துவதில் பிரித்தானிய தமிழர் பேரவையும் பின்னணியில் இயங்கியிருந்தது.

இந்த விவாதத்தில் சுயநிர்யணய உரிமை, இன அழிப்பு மற்றும் பொறப்புக் கூறல் தொடர்பாக வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத இலங்கை அரசு என்பவை சுட்டிக்காட்டப்பட்டுக் கேள்விகள் எழுப்பப்பட்டபோதும் பிரித்தானிய அரசின் பிரதிநிதி அவற்றுக்குப் பதிலளிக்காமல் சுற்றிவளைத்துப் பதிலளித்தார்.

குறிப்பாக போர்க்குற்றத்தில் நேரடி யாக ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டப்படும் இராணுவத் தளபதிகளில் ஒருவரான சவேந்திர சில்வா போன் றவர்கள் மீது தடைகளைக் கொண்டு வரவேண்டும் என்று கேள்வி எழுப்பப்பட்டபோது அதற்குப் பகிரங்கமாகப் பதலளிக்க முடியாது என்ற தோரணையில் அவரது பதில் அமைந்திருந்தது.

பிரித்தானிய தமிழர் பேரவையையும் உலகத் தமிழர் பேரவை என்ற தனிநபர்க் குழுவை யும் ஒப்புநோக்கினால், இரண்டும் ஏறத்தாழ சிறுமைப்பட்டுப் போயுள்ளன என்பதும், இவை இரண்டில் ஒன்று முழுமையாகவே தனிநபர்க் குழு என்பதும் மற்றையது ஓரளவுக்காவது மக்கள் தளத்துக்குக் கட்டுப்படும் போக்குடையது என்பதும் வெளிப்படும்.

ஆனால், அடிப்படைக் கோரிக்கைகளில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அடகு வைக்கும் சர்வதேச தன்னார்வ நிறுவனங்களின் நோக்கங்கள் இந்த அமைப்புகளைக் குறிவைக்கும் போது ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படும் ஒரு மனநிலையை இந்த இரண்டு அமைப்புகளைச் சார்ந்த முக்கிய நபர்களிடம் காண முடியும். இந்தப் பின்னணியில் தான் சுரேன் சுரேந்திரன் உலகத் தமிழர் பேரவையின் ஊடாக இமாலயப் பிரகடனம் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

எதிர்வீரசிங்கம் தலைமைப் பதவியில் இருந்து விலகிச்சென்றதும் அப்போது ஜேர்மனியில் இருந்த அருட்தந்தை எஸ்.ஜே.இமானுவல் 2010 இல் உலகத் தமிழர் பேரவைக்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

எதிர்வீரசிங்கம் இணக்க அரசியலுக்குள் செல்கிறார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே அப்போது அருட்தந்தை இமானுவல் உலகத் தமிழர் பேரவையின் தலைவராகத் தெரிவுசெய்யப் பட்டார்.

இலங்கை திரும்பியிருந்த எதிர்வீரசிங்கம், 2013 ஜனவரி மாதம் அப்போதைய வடமாகாண ஆளுநர் சந்திரசிறியின் கல்வி மற்றும் விளையாட்டுத்துறை ஆலோசகராக பதவி ஏற்றிருந்தன் மூலம் அவரின் இணக்க அரசியல் அடுத்த படிநிலையில் வெளிப்பட்டது.

அப்போது, இமானுவல் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார். சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப் பாட்டியிலும் தெளிவுடன் செயற்பட்டார்.

ஆனால் தலைவராகப் பதவியேற்று அவர் அமெரிக்காவுக்குச் சென்றபோது அங்கு அறிவுறுத்தப்பட்டதன்பிரகாரம் 'ஐக்கிய இலங்கை' 'இலங்கையர் என்ற அடையாளம்' ஆகியவற்றைப் பேணி 'இன அழிப்பு' விசாரணையைக் கைவிட வேண்டும் என்ற வல்லரசுகளின் புவிசார் அரசியல் - பொருளாதார வியூகங்களுக்கு ஏற்பச் செயற்படும் நிலைமைக்கு இமானுவல் அடிகளாரும் தள்ளப்பட்டார்.

அருட்தந்தை இமானுவல் வயது மூப்பின் காரணமாக செயற்பட முடியாமல் இருந்ததால் அதையும் சுரேன் சுரேந்திரன் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். பின்னாளில் தாயகம் திரும்பித் தற்போது யாழ் ஆயர் இல்லத்தில் இமானுவல் தங்கியுள்ளார். எதிர்வீரசிங்கமும் தாயகத்தில் குடியேறியுள்ளார்.

இந் நிலையில் தற்போது தனித்து இயங்கும் சுரேன் சுரேந்திரன் சர்வதேச தன்னார்வ நிறுவனங்களின் விருப்பங்களுக்கு ஏற்ப மிக இரகசியமாகத் தனிப்பட செயற்பட்டு இமாலயப் பிரகடனம் என்ற திட்டத்தை அரங்கேற்றி யிருக்கிறார்.

அதன் முகவுரை மாத்திரமே ஊடகங்களில் வெளியிடப்பட்டிருக்கிறது. உண்மையான உள்ளடக்கத்தை வாசிப்பவர்களுக்குத் தான் அதன் ஆழமான சிக்கல்கள் தெரியவரும்.

முன்னர் சிங்கப்பூர் தீர்மானம் இரண்டு வருடங்களின் பின்னர் வெளியே கசிந்தது போன்று இந்தப் பிரகடனமும் ஒன்று இரண்டு வருடங்களின் பின்னர் கசிய முன்னதாக, தாமாகவே அதை அவர்கள் பகிரங்கமாக கையளித்து பேசி வரு கிறார்கள்.

நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹேய்ம் காலநிலை மாற்றம் குறித்த விவகாரங்களுக்கான இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகராகக் கடமையாற்றினாலும் அவர் சீனாவை முன்னிலைப்படுத்தியே செயற்பட்டும் பேசியும் வருகிறார்.

தமிழ் நாட்டுக்குள் எரிக்சொல்ஹேய்ம் சில நகர்வுகளை முன்னெடுத்தும் வருகிறார். புதுடில்லியுடன் உறவைப் பேணக்கூடிய முறையில் அவருடைய வியூகங்கள் அமைந்துள்ளன.

சுரேன் சுரேந்திரனைப் பொறுத்தவரை ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு என்ற விடயத்தில் எவருடனும் பேச வேண்டும் என்ற நிலைப்பாட்டை மீண்டும் மீண்டும் எடுத்துரைக் கிறார்.

அந்த அடிப்படையில் அமெரிக்காவுடன் மட்டுமல்ல இந்தியா, தென்னாபிரிக்கா, சீனா போன்ற நாடுகளுடனும் சேர்ந்து பயணிக்கக் கூடிய ஒருவர். இமாலயப் பிரகடனத்தை அவர் எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லக்கூடியவர்.

இமாலயப் பிரகடனம் தொடர்பாக இந்தியாவுடனும் பேசக்கூடிய வாய்ப்புகளும் உண்டு. எவ்வாறாயினும் இத் திட்டம் இலங்கையை கையாளுவதற்கான இணக்க அரசி யலை முன்னெடுக்கும் திட்டம்தான். அதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால் இத் திட்டம் உண்மையில் யாருக்கானது என்பது, சுரேன் சுரேந்திரனை இயக்கும் குறித்த சர்வதேச தன்னார்வ நிறுவனத் துக்கு மாத்திரமே தெரிந்திருக்கும்.

அதேநேரம் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க மங்கள சமரவீரவின் முயற்சியைத் தொடரு கிறார் என்பதற்கும் இத் திட்டம் சிறந்த உதாரணம். சுமந்திரன் பின்னணியாக இல்லாதது போலக் காட்டிக்கொண்டு இருக்கிறாரா என்ற கேள்விகளும் ஐயங்களும் எழுப்பப்பட்டுள்ளன.

ஏனெனில் 2015 இல் ரணில் பிரதமராக இருந்தபோது ஒற்றையாட்சிக்குள் சமஸ்டி சாத்தியம் என்ற தோரணையில் முன்வைக்கப்பட்ட தீர்வுப் பொதிக்கு ஒப்பானதாகவே இமாலயப் பிரகடனத்திற்குரிய அணுகுமுறை அமைந்துள்ளது.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டுமென மார் தட்டிய மிலிந்த

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## விதையும் ... தொடர்ச்சி ...

நாடுகளுக்கும் இடையிலான பாலமாகத் திகழ்கின்றனர். மலையக சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் அவசியமான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்குமென்று இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உறுதியளித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் ஜீவன் தொண்டமான் மலையகம் மாற்றமடைய வேண்டுமெனில் முதலில் எமது மனங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும். எம்மத்தியில் உள்ள பிரிவினைகள் மற்றும் பிரச்சினைகளை புறந்தள்ளிவிட்டு நாம் அனைவரும் ஒன்றுபட்டு முன்னோக்கி பயணிக்க வேண்டும் என்று கூறியதுடன் 'நான் மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது தீருவேன்' என்றும் சூளுரைத்தார்.

### அரசியல் அமைப்பு

இதேவேளை இம்மாதம் 24ம் திகதி நுவரெலியாவில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான இராதாகிருஸ்ணன் தலைமையில் '200இல் மலையகம் மாற்றத்தை நோக்கி'' என்ற மாபெரும் நிகழ்வு இடம்பெற்றது. இங்கு உரையாற்றிய எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா, வரலாற்றில் தொழிலாளர்களாகவே அடையாளப்படுத்தப்படும் மலையக பெருந்தோட்ட மக்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் சிறுதோட்ட உரிமையாளராக்கப்படுவார்கள்.

அதற்கான புரட்சியை எமது ஆட்சியின் முதல் நாளில் இருந்தே ஆரம்பிப்போம். இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் சமமானவர்கள் என்று அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கேற்ப அவர்கள் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும். அரசியலமைப்பில் அவ்வாறு கூறப்பட்டாலும் தற்போது வரையிலும் யதார்த்தத்தில் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய மரியாதையும், பலமும் இன்னும் கிடைக்கவில்லை.

மலையக மக்களுக்கான பிரஜாவுரிமையை மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவே (சஜித்தின் தந்தை) வழங்கினார். எமது ஆட்சியில் மலையக மக்கள் உயிர் வாழ்வதற்கான வாழ்வாதார உரிமையை நாம் பெற்றுக் கொடுப்போம். இன்னமும் லயன் அறைகளில் வாழ்க்கையை நடத்திக் கொண்டும், குறைந்தளவான கல்வி மற்றும் சுகாதார வசதிகளைக் கொண்டும் மிகவும் துயர வாழ்க்கையை வாழும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கு நாம் முன்வந்துள்ளோம்.

எமது ஆட்சியில் முதலாவது காலப் பகுதியில் காணி உரித்துடைய, பொருளாதார பலம் கொண்ட, கல்வி மற்றும் சுகாதார வசதிகளைப் பெற்ற, அனைத்திலும் இயலுமையைக் கொண்ட கௌரவமான வாழ்க்கையை மலையக மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான பயணத்தை ரணசிங்க பிரேமதாசாவின் பெயரில் நாம் ஆரம்பித்து செயற்படுத்துவோம் என்றார்.

இதேவேளை இங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன் பல வியத்தகுசாதனைகளைமலையகமக்கள்பெற்றுக் கொண்டுள்ளதாக மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். மலையகம் 200 என்பது வெறும் வார்த்தையல்ல. அதற்குப் பின்னால் பல்லாயிரக்கணக்கான தமிழ் உறவுகளின் வலிகளும், உயிர் தியாகங்களும் இரண்டறக் கலந்து இந்த மண்ணுக்கு உரமாக அமைந்திருக்கின்றன. எனவே மலையக சமூகமென்பது வாழமுடியாத அடையாளமற்ற இனமல்ல. மாறாக நீண்ட வரலாறு கொண்ட தனித்துவமான தமிழினம் என்ற வகையில் மலையக மக்களுக்கு வலிமை சேர்க்கும் வார்த்தைகளையும் நிகழ்வில் அவதானிக்க முடிந்தது.

இவ்வாறாக இந்திய வம்சாவளி மலையக மக்கள் இலங்கைக்கு வருகைதந்து 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வுகளில் கருத்துக்கள் எதிரொலித்தன. இம்மக்களின் வாழ்வில் பல்துறைசார் அபிவிருத்திகளையும் ஏற்படுத்தப் போவதாக பலரும் இந்நிகழ்வில் வலியுறுத்தியபோதும் இதன் சாத்தியப்பாடுகள் கேள்விக்குறியாகியுள்ளன. வழமைபோலவே இந்த வருடமும் வாக்குறுதிகளுடனேயே கடந்துவிட்டது.

எதிர்க்கட்சியில் இருக்கும்போது பல்வேறு வாக்குறுதிகளையும் வழங்குபவர்கள் ஆட்சிபீடமேறியதும் எல்லாவற்றையும் மறந்து செயற்பட்ட வரலாறுகள் இலங்கையின் வரலாற்றில் அநேகமாகும். இதுபோன்றே தேர்தல் விஞ்ஞாபனங்களிலும், வரவு செலவு திட்ட முன்மொழிவுகளிலும் மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் எழுச்சி கருதி பல்வேறு முன்வைப்புக்கள் இடம் பெற்று வருகின்றன. எனினும் தேர்தல் முடிந்தகையோடும், வரவுசெலவு திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னரும் அனைத்து வாக்குறுதிகளால் காற்றில் பறக்கவிடப்பட்டு விடுகின்றன.

இதைப்போன்றே 200 வருட பூர்த்தியை முன்னிட்டு இடம்பெறும் நிகழ்வுகளிலும் மலையக மக்களின் அபிவிருத்தி கருதி பல்வேறு வாக்குறுதிகள், முன்வைப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இந்த வாக்குறுதிகள் அனைத்தும் காற்றில் பறந்துவிடாத நிலையில் செயல்வடிவம் பெற வேண்டியது அவசியமாகும். இதைவிடுத்து 'புதிய மொந்தையில் பழைய கள்' என்று நிலைமைகள் தொடருமானால் இதனால் ஏற்படும் பாதக விளைவுகள் அதிகமானதாக இருக்கும் என்பது மறுப்பதற்கில்லை. எனவே இந்த வருடத்தில் மலையக மக்கள் தொடர்பாக விதைக்கப்பட்ட கனவுகள் விருட்சமாக வேண்டும் என்பதே பலரினதும் எதிர்பார்ப்பாகும்.

• • •

## இமாலயப் ... தொடர்ச்சி ...

மொறகொட, இலங்கை ஒற்றையாட்சி அரசின் அமைச்சர்களுக்குரிய முழு அந்தஸ்துடனும் இந்தியாவில் இலங்கைக்கான தூதுவராகக் கடமையாற்றுகிறார். இவர் எரிக்சொல்ஹேய்முடன் மிக நெருக்கமானவர்.

ஆகவே இலங்கை ஒற்றையாட்சி என்ற கட்டமைப்புக்கு ஏற்றவாறும் வல்லாதிக்க நாடுகளின் புவிசார் அரசியல் - பொருளாதார நோக்கிலும் இமாலயப் பிரகடனம் அமைந்துள்ளது என்பது பகிரங்கமான உண்மை.

உலக அரசியல் ஒழுங்கு இன்று குழப்பியுள்ள நிலையிலும் பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் இன அழிப்பு வெளிப்படுள்ளது. இதனால் 'இரு அரசுகள்' என்பதுதான் தீர்வு என்ற கருத்து உலகில் தற்போது பலமாகப் பேசப்பட்டு வருகின்றது.

இப் பின்னணியில் ஏற்கனவே புஸ்வாணமாகிப் போய்விட்ட போலித் துவாரகா பற்றி இன்னும் தொடர்ச்சியாகப் பல முனைகளில் ஆராய்ந்து கொண்டிருக்கும் சில தமிழ் ஆய்வாளர்கள், இமாலயப் பிரகடனத்தின் பின்புலம் பற்றி ஆராயாமல் அமைதியாக இருப்பதன் நோக்கம் தான் என்ன?

இத் திட்டத்தை அமெரிக்காவும் சுவிஸ்லாந்து மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுக ளும் பகிரங்கமாக வரவேற்றிருக்கின்றன. தென்னாபிரிக்கா வாழ்த்தியுள்ளது.

அமெரிக்கா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நலன்கள் சார்ந்து செயற்பட்டு வரும் ஜேர்மன். சுவிஸ் நாடுகளை மையமாக் கொண்ட சர்வதேச தன்னார்வ நிறுவனங்கள், ஈழத்தமிழர் விவகாரத்தில் ஆங்கில மொழி பேசும் நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழ் நபர்களையே இந்தத் திட்டத்தின்முதற்சுற்றில் ஈடுபடுத்தியிருப்பதையும் இங்கு நோக்க வேண்டும்.

இத் தன்னார்வ நிறுவனங்களின் தேவைக்கும் அந்த நிறுவனங்களில் தலைமையிலும் நடத்தப்படும் கூட்டங்களில் பங்கொள்ளாமல், தமிழ்த் தேசியக் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளும் புலம்பெயர்த் தமிழ் அமைப்புகளும் ஒரு புள்ளியில் ஒருமித்த குரலில் செயற்பட்டால் வல்லாதிக்க சக்திகளையும் இலங்கை அரசையும் தமது நலன்களுக்கேற்ப ஒருசேர எதிர்கொள்ள முடியும்.

மாறியுள்ள உலகச் சூழலில், ஈழத்தமிழர் அரசியல் பேரம் பேசுவதற்கான ஏதுநிலை மீண்டும் தோன்றவுள்ளது என்பதை ஈழத்தமிழர்கள் உணர்ந்து செயற்பட முன்னரே, உளவு மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் மறுமுனையில் செயற்பட ஆரம்பித்துவிட்டன என்ற ஆபத்தின் அறிகுறியே இந்த இமாலயப் பிரகடனம்.

தனித்தனியே இதை எதிர்கொள்ளாது, கூட்டாக எதிர்கொள்வதிலேயே ஈழத்தமிழர் அரசியற் பலம் சர்வதேச, பிராந்திய அரங்குகளில் மீண்டும் கருக்கொள்ள முடியும்.

**நன்றி: கூர்மை இணையம்**

## அனுராதபுரத்தில் ... தொடர்ச்சி ...

தெரிவித்துள்ளதாவது:

குடைவரையான இக்கோயில் ஓர் ஐயனார் கோயில் என்பதை நிரூபிக்கும் வகையில் இங்கு ஐய னாரும், அருகேயே யானை மற்றும் குதிரை ஆகியவை புடைப்பு சிற் பமாக செதுக்கப்பட்டுள்ளது. மேலும் மூலவர் வாயில் நிலை காலில் இருபுறமும் யானை உள்ளது. நிலை காலின் மேலே வேழத்திருமகள் உள்ளார். இவை ஆசிவகம் அல்லது ஐயனார் வழிபாடு நோக்கி நம்மை எடுத்து செல்கிறது.

ஈசுர முனி என்னும் பெயரே இவரை முனி என்கிறது குறிப்பிடத்தக்கது. ஆனால் இப்போதோ மூலவராக புத்தர் உள்ளார். இவ்வாலயம் போலவே இலங்கை தீவு முழுவதும் பல தமிழ் கோயில்கள் பல வகையில் பல்வேறு காலகட்டங்களில் புத்தமயமாக்கப்பட்டுள்ளது.

## போரும், பொரு ... தொடர்ச்சி ...

தேவையான அணுவாயுதங்கள், ஏனைய வெடி பொருட்கள் மற்றும் ஆயுதங்களின் உற்பத்தியை அதிகரிக்கு மாறு வடகொரிய அதிபர் தனது படையினருக்கு உத்தரவிட்டிருந்ததும், அதனை தொடர்ந்து தாக்குதல் ஒன்று இடம்பெற்றால் தமது உத் தரவுக்காக காத்திருக்காது உடனடியாக தாக்குமாறு தென்கொரிய படைத்தளபதி தனது படையினருக்கு உத்தரவிட்டிருப்பதும் இந்த வருடத்தின் இறுதி மாதத்தில் நிகழந்த சம்பவங்கள்.

அதாவது கடந்து செல்லும் இந்த வருடத்தில் பொருளாதாரத்தின் வீழ்ச்சியையும், போரின் விரிவாக்கத்தையுமே நாம் கண்டுள்ளோம். அது அடுத்த வருடமும் தொடரும் சாத்தயங்களே அதிகம் தென்படுகின்றன. 2024ஆம் ஆண்டு அமெரிக்கா, ரஸ்யா, இந்தியா, தாய்வான், இலங்கை, உட்பட ஏறத்தாள 60 நாடுகளில் தேர்தல்கள் இடம் பெறவுள்ளன.

இந்த தேர்தல்களின் முடிவுகள் உலகின் பூகோள அரசியலில் அதிகம் தாக்கம் செலுத்தும் என்பது வெளிப்படையானது. ஆனால் அது தற்போது தீவிரமடையும் போரை மேலும் தீவிரமாக்குமா இல்லை தணிக்குமா என்பது தான் மில்லியன் டொலர்கள் பெறுமதியான கேள்வி.

இந்த வருடம் நடந்த சம்பவங்களை வைத்துப் பார்த்தால் உலகம் மிகப்பெரும் அழிவை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது என்பதை தான் தற்போது எதிர்வுகூறமுடியும்.

• • •

## கிழக்கில் தமிழர் ... தொடர்ச்சி ...

தெரிவித்து இந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையிலேயே மீண்டும் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் கால்நடை பண்ணையாளர்களின் காணிகள் திட்டமிட்ட வகையில் சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகள் அபகரிக்கும் நடவடிக்கைகளை தடுத்துநிறுத்துமாறும் தமது காணிகளை பாதுகாக்குமாறு கோரியும் மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர்கள் தொடர்ச்சியான போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த போராட்டத்தினை அடக்குவதற்கு சிங்கள தேசம் பல்வேறு உத்திகளை முன்னெடுத்தபோதிலும் அனைத்தையும் தாண்டிய வகையில் 105நாட்களையும் தாண்டி போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இந்த போராட்டத்திற்கு ஆதரவு வழங்கிய பல்கலைக்கழக மாணவர்களை கைதுசெய்து அவர்களின் குரல் வளைகளைநசுக்கும் செயற்பாடுகளையும் பண்ணையாளர்களுக்கு ஆதரவாக செயற்படும் ஊடகவியலாளர்களையும் சமூக செயற்பாட்டாளர்களையும் ஒதுங்க செய்வதற்கு பல்வேறு உத்திகள் கையாளப்பட்டுவரும் நிலையில் பண்ணையாளர்களின் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது

கிழக்கில் இன மோதல்களையும் மத மோதல்களையும் ஏற்படுத்தி தமிழர்களின் இருப்பினை கேள்விக்குட்படுத்தும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் நிலையிலும் கிழக்கில் இந்த ஆண்டு தமிழர்களுக்கு போராட்டம் நிறைந்த ஆண்டாகவே முடிந்திருக்கின்றது.புதிய ஆண்டும் போராட்டம் நிறைந்த ஆண்டாகவே மலரப்போகின்றது என்ற கவலையான விடயத்தினை இங்கு பதிவுசெய்து கடந்த காலத்தில் தமிழர்கள் கிழக்கில் எதிர்கொண்ட சிக்கல்கள் நீங்க வழியேற்படுத்தப்படவேண்டும் என்ற வேண்டுதலுடன் இந்த ஆண்டை பூர்த்திசெய்து புதிய ஆண்டை வரவேற்கின்றேன்.

## விஜயகாந்தின்... தொடர்ச்சி ...

எதிர்பார்த்த நிலையில், பாமகவின் கோட்டையாகக் கருதப்பட்ட விருத்தாசலம் தொகுதியில் போட்டியிட்டார். கட்சியின் அனைத்து வேட்பாளர்களும் தோல்வியடைந்த நிலையில், விஜயகாந்த் மட்டும் வெற்றிபெற்றார்.

ஆனாலும், அந்த தேர்தலில் தேமுதிக 8.4 சதவீத வாக்குகளைப் பெற்று, அரசியல் கட்சிகளைத் திரும்பிப் பார்க்கவைத்தது. தொடர்ந்து பெரிய அளவில் வெற்றி பெறாவிட்டாலும் 10 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்த நிலையில், 2011 தேர்தலில் விஜயகாந்துடன் கூட்டணி அமைக்க கருணாநிதி, ஜெயலலிதா இருவருமே விரும்பினர். யாருக்கும் பிடிகொடுக்காமல் இருந்த விஜயகாந்த், கடைசி நேரத்தில் ஜெயலலிதாவை சந்தித்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

2011தேர்தலில் ஜெயலலிதா ஆட்சியைப் பிடிக்க தே.மு.தி.க உதவியது. அந்த தேர்தலில் தே.மு.தி.க 29 இடங்களில் வென்று, விஜயகாந்த் எதிர்கட்சித் தலைவரானார். திமுக முதல் தடவையாக 3-வது இடத்துக்குத் தள்ளப்பட்டது. பின்னர் நடைபெற்ற அரசியல் நிகழ்வுகள் விஜயகாந்த்துக்கு சரிவை ஏற்படுத்தத் தொடங்கின. அவரது நண்பரும், எம்எல்ஏ யுமான சுந்தர்ராஜன் உட்பட ஏராள மான எம்எல்ஏக்கள் அதிமுக ஆதரவு நிலைப்பாட்டை எடுத்து, விஜயகாந்துக்கு எதிராகத் திரும்பினர். அதுவே விஜயகாந்துக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தி, அவரது உடல்நலக் குறைவுக்கு முக்கியக் காரணமாக அமைந்ததாக சொல்லப்பட்டது.

ஜெயலலிதாவுடனான அரசியல் கூட்டணியை குறுகிய காலத்திலேயே விஜயகாந்த் முறித்துக்கொண்டார். விடுதலைப் புலிகள் மற்றும் ஈழத் தமிழர்கள் தொடர்பாக ஜெயலலிதா கொண்டிருந்த நிலைப்பாடும் இவ்வாறு கூட்டணியை முறித்துக்கொண்டு விஜயகாந்த் வெளியேறுவதற்கான காரணிகளில் செல்வாக்கைச் செலுத்தியிருக்கலாம். அதன் பின்னர் பா.ஜ.க.வுடன் அவர் கூட்டணி அமைத்தார். மக்களுடன்தான் கூட்டணி என முழுங்கியவர், பின்னர் அரசியல் காரணங்களுக்காக இவ்வாறான கூட்டணிகளை அமைத்துக்கொண்டது அவரது தனித்துவத்தை மட்டுமன்றி, அவசரது அரசியலையும் பாதித்தது.

எது எப்படியிருந்தாலும் ஈழத் தமிழர்க்கள் மீதான அவரது பற்றுதலை இந்த வேளையில் நினைவுகூர்ந்து அவருக்கான எமது அஞ்சலியையும் செலுத்துவோம்.

• • •

## விஜயகாந்துக்கு ... தொடர்ச்சி ...

மரணமடைந்துள்ளார்.

திரையுலகில் முன்னனி நடிகர் மட்டுமல்லாது, தயாரிப்பாளர், இயக்குனர் என பல துறைகளில் அவர் பணியாற்றியவர். 1979 ஆம் ஆண்டு அகல்விளக்கு என்ற திரைப்படம் மூலம் அறிமுகமாகிய அவர் 2015 ஆம் ஆண்டுவரை 150 இற்கு மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். அவருக்கு புரட்சிக் கலைஞர் மற்றும் கப்டன் என்ற பட்டங்களும் திரைப்படத்துறையில் வழங்கப்பட்டிருந்தது.

தேசிய முற்போக்கு திராவிட கழகம் என்ற கட்சியை ஆரம்பித்த அவர் 2006 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் தமிழக சட்டமன்ற தேர்தல்களிலும் வெற்றிபெற்றிருந்தார்.

தமிழக சட்டசபையில் எதிர்க்கட்சி நிலைக்கும் தனது கட்சியை அவர் உயர்த்தியிருந்தார். ஈழத்தமிழ் மக்களின் விடுதலைக்கான தொடர்ந்து எந்தவித தன்னலமும் இன்றி அவர் குரல் கொடுத்து வந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அவரின் இந்த மறைவுக்கு ஈழத்தமிழ் மக்கள் சார்பில் இலக்கு தனது இரங்கல்களை தெரிவித்துக் கொள்கின்றது.

## இந்திய அரசு ... தொடர்ச்சி ...

தொடர்பில் பணியாற்றிய ஊடகவியாலாளர் ஆனந்மங்கேலெ ஆகியோர் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றனர். அவர்களின் அப்பிள் தொலை பேசிக்குள் இந்த மென்பொருட்கள் ஊடுருவியது கடந்த ஒக்டோபர் கண்டறியப்பட்டுள்ளது.

சட்டத்திற்கு புறம்பாக இந்திய அரசு கண்பாணிப்புக்களை மேற்கொண்டு வருவதாகவும், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலார்களை துன்புறுத்துவதாகவும் அனைத்துலக மன்னிப்புச் சபையின் பாதுகாப்பு பிரிவின் தலைவர் டொன்சா ஓ சேர்பாகில் தெரிவித்துள்ளார்.

## முயற்சி செய் ... தொடர்ச்சி ...

வருமானமும் கிடைக்கப் பெறுகிறது இதில் இருந்து ஒரு பகுதியை உண்டியல் மூலமாக சேமித்து வருகிறேன்" எனவும் இப் பெண்மணி தெரிவித்தார்.

இயற்கை அனர்த்தங்களான சூறாவெளி, வெள்ளப்பெருக்கு போன்றன ஏற்பட்டாலும் தனது வீட்டுக்குள் வெள்ளம் புகுந்து உற்பத்தி பொருட்கள் பாதிப்படைவதாக தெரிவித்திருந்தார் . ஆனாலும் அதனை பாதுகாத்து தொடர்ந்தேர்ச்சியான சந்தைப் படுத்தலை மேற்கொண்டு வருகிறார்.

கூலியாட்கள் மூலமாக உற்பத்திகளை மேற்கொள்ள இருவருக்கு தினக் கூலி கொடுப்பனவும் வழங்குகிறார். சில வேலைகளில் ஓடர்கள் கூடுதலாக வந்தால் உற்பத்தி பொருட்களின் மூலமான இலாபம் கூடுதலாக அவளுக்கு கிடைக்கப் பெறலாம்.

தொடரும்...

## ரஸ்ய கடற்... தொடர்ச்சி ...

எஸ்.யூ-24 ரக விமானங்கள் இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளன. ரஸ்யாவின் பாதுகாப்பு வியூகங்களை கடந்து சென்ற இந்த விமானங்கள் ஏவுகணைகளை ஏவியபோதும். வுமானங்கள் திரும்பியபோது நிகலோவ் நகரில் இருந்து 125 கி.மீ தொலைவில் வைத்து ரஸ்யாவின் வான்பாதுகாப்பு படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுனின்றது.

ஐரோப்பிய நாடுகள் புதிய நவீன வான் பாதுகாப்பு ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்கியுள்ளதாக இந்த வாரம் செய்திகள் வெளி வந்துள்ள நிலையில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

## போரினால்... தொடர்ச்சி ...

மீளமைப்பு செய்யப்பட்டு, சிறுவர்கள் தரமான கல்வியூட்டலைப் பெற்றுக்கொள்ளவும், ஏனைய அத்தியாவசிய தேவைகளைப் பெற்றுக் கொள்ளவும் உரிய வசதிகள் அவர்களுக்குச் செய்துகொடுக்கப்படவேண்டும். இவற்றுடன் அமைதி மற்றும் நல்லிணக்கம் போன்ற வற்றை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப் படவேண்டும். போரின் இரு பக்கத்திலுமுள்ள சிறுவர்கள் தமக்கிடையே உரையாடல்களை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பும் ஒருவரையொருவர் புரிந்து நடக்கக்கூடிய வாய்ப்புகளும் அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும்.

**நன்றி: groundviews.org**

## போருக்கு ... தொடர்ச்சி ...

மேற்கொண்டுவருவதாக அமெரிக்கா குற்றம் சுமத்தி வருகின்றது. அதேசமயம், வடகொரியாவின் படைத்துறைக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை ரஸ்யா வழங்கி வருகின்றது.

அண்மையில் வடகொரியா விண்ணில் செலுத்திய படைத்துறை உளவு செய்மதிக்கான தொழில்நுட்ப உதவிகளையும் ரஸ்யாவே வழங்கியிருந்தது.

கோவிட்-19 நெருக்கடியால் அதிக பொருளாதார வீழ்ச்சியை சந்தித்த வட கொரியாவில் கடந்த வருடம் காலநிலை சாதக மாக அமைந்ததால் அதிக விவசாய உற்பத்தியை அது அறுவடை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கடல்சார்ந்த ... தொடர்ச்சி ...

கடற்சூழற் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

கடலைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அனைத்துமக்களுக்கும்உண்டு.ஆனாலும்கடலின் பங்காளிகளான, கடலையே வாழ்வாதாரமாகக் கொண்ட கடற்றொழிலாளர்களுக்கு இந்தக் கடப்பாடு அதிகமாகவே இருக்கிறது. அதற்கான பட்டறிவும், பராக்கிரமும் இவர்களிடம்தான் அதிகளவில் இருக்கிறது. கடற்சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அவசரப் பணியாக விரைந்து மேற்கொள்வதே பூமியில் எமது இருப்புக்கான உத்தரவாதமாக அமையும். இதுவே, கடற்கோளில் பலியான எம் உறவுகளுக்கு நாம் செலுத்தும் உண்மையா அஞ்சலியாகவும் இருக்கும்" என்று அவர் தெரிவித்தார்.

## உலகின் ... தொடர்ச்சி ...

இது ஒரு எரிசக்தி வர்த்தகத் திட்டம். இதன் மீதான தடை பல நாடுகளின் எரிபொருள் வினியோகத்திலும், பொருளாதாரத்திலும் பாதிப்புக்களை ஏற்படுத்தும். அமெரிக்கா எப்போதும் தன்னலன் சார்ந்தே செயற்படுவதுண்டு என அது மேலும் தெரிவித்தள்ளது.

எரிவாயு உற்பத்தியில் ரஸ்யா நான்காவது இடத்தில் உள்ளது. அமெரிக்கா, கட்டார், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் முன்னனியில் உள்ளன.